விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 21 புதன்கிழமை (03.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 46

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## பொதுக் கூட்டத்தில் முடிபு த.ம.வி.பு. அறிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து எதிர்வரும் ஆறாம் திகதி பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தி முடிபு செய்யப்படும் எனத் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் ஊடகப் பேச்சாளர் ஆஷாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பொறுப்பு மிக்க அரசியல் கட்சி. கிழக்கு மாகாணத்தில் ஒரு பொறுப்பு மிக்க மக்கள் ஆதரவு உள்ள கட்சியாகும். (16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார்ப் பகுதியில் மீன்பிடிக்கு கெடுபிடிகள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலுக்கு மீண்டும் கெடுபிடிகள் விதிக்கப்பட்டுள்ளதாக அப் பகுதி மீனவர்கள் கூறுகிறார்கள். நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் எந்தவிதமான தடைகளும் இல்லாமல் அப் பகுதியில் மீன் பிடிக்கலாம் என்று கூறப்பட்டதாகவும் தேர்தல் முடிந்த பிறகு காலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டுமே மீன்பிடிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ட்ரான்ஸ் ஏசியா கமராவில் பதியப்பட்ட தகவல் அழிப்பு

(கொழும்பு)

தேர்தல் இடம்பெற்ற தினத்தன்று கொழும்பு ட்ரான்ஸ் ஏசியா ஹோட்டலில் தங்கியிருந்த சரத் பொன்சேகாவின் ஆதரவாளர்கள் ஹோட்டல் பாதுகாப்புக் கண்காணிப்புக் கமராவில் பதியப்பட்ட தகவல்களை அழித்துள்ளனர் என்று குற்றத் தடுப்புப் பிரிவினர் கொழும்பு புறக்கோட்டை நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தற்போது ஹோட்டல் பாதுகாப்புக் கண்காணிப்புக் கமராக்களின் (16 ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திர தின நிகழ்வுகளை புறக்கணிக்க ஐ.தே.க. முடிவு

## மகாநாயக்கர்களுக்கும் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் 62-வது சுதந்திர தின நிகழ்வுகளைப் புறக்கணிக்கப் போவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. கட்சி மட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொண்ட இந்த முடிபினை ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை கண்டியில் அஸ்கிரிய மற்றும் மல்வத்தப் பீடாதிபதிகளைச் சந்தித்து உத்தியோக பூர்வமாகத் தெரியப்படுத்தியுள்ளனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குக் கல்வி அமைச்சில் திடீர் இடமாற்ற உத்தரவுகள்

(திருகோணமலை)

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்குட்பட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கிடையில் திடீர் இடமாற்றங்களை ஆளுநர் றியல் அட்மிரல் மொகான் விஜயவிக்ரம வழங்கியுள்ளார்.

இவ் இடமாற்றங்கள் தொடர்பில் அவர் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு வழங்கியுள்ள அறிவித்தல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தண்டாயுதபாணி கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதி செயலாளராக மாற்றம் பெறுகின்றார்.

அத்துடன் வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.வித்தியானந்தமூர்த்தி மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்படுகின்றார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## மேற்குலக நாடுகள் மீது அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை ஆட்சியிலிருந்து கவிழ்ப்பதற்குச் சில மேற்குலக நாடுகள் முனைப்புக் காட்டி வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாகவே தேர்தல் மோசடி குறித்து எதிர்ப்புப் போராட்டங்களை எதிர்க்கட்சிகள் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈரானில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது அந் நாட்டு ஜனாதிபதியின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு இவ்வாறான ஓர் சதித்திட்டத்தை மேற்குலக நாடுகள் கட்டவிழ்த்து விட்டதாகச் (16 ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவின் 2-வது ஜனாதிபதி ஆட்சி நவம்பர் 19 இல் ஆரம்பமாகின்றது

### நீதிமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதி பதவிக்கு இரண்டாவது தடவையாகத் தேர்தலின் மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பதவிக்காலம் இந்த ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாவதாக உயர் நீதிமன்றம் அறிவித்திருக்கின்றது. இந்தத் தகவலை ஜனாதிபதியின் செயலாளர் வெளியிட்டிருப்பதாக அரச தகவல் திணைக்களம் கூறியிருக்கின்றது.

தமது பதவிக்காலம் முடிவடைவதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் எஞ்சியுள்ள நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலுக்கான (16 ஆம் பக்கம் பார்க்க)




## ஹெப்பிட்டிக்கொல்லாவ பஸ் தாக்குதல்

## 3 வருடங்களுக்குப் பின்னர் சந்தேக நபர் கைதானார்

(கொழும்பு)

ஹெப்பிட்டிக்கொல்லாவ பஸ் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டு ஹெப்பிட்டிக்கொல்லாவப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட பஸ் குண்டுத் தாக்குதலில் 64 பொதுமக்கள் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தெருநுவர பிரதேசத்தைச் சேர்ந்த விசேட பொலிஸ் குழுவினர் குறித்த நபரைக் கைது செய்துள்ளனர். குறித்த நபர் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகள் ஆரம்பிக்கப் (16 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் முடிந்தும் வன்முறை ஓயவில்லை;

## இலங்கையின் நிலை குறித்து அம்னெஸ்டி அமைப்பு கவலை

(கொழும்பு)


விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றியடைந்ததையடுத்து நடைபெற்று முடிந்துள்ள ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இலங்கையில் அரசியல் அடக்கு முறைகள் முடிபுக்கு வந்திருக்க வேண்டும்.

ஆயினும் அதற்குப் பதிலாக கருத்துச் சுதந்திரம் மோசமான முறையில் நெருக்கப்பட்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது என அனைத்துலக மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் மது மல்ஹோத்ரா அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றார்.

தேர்தலுக்குப் (16 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





யாழ்.குடாநாட்டுக்கு நேற்று விஜயம் செய்த கொரிய பொறியியலாளர் குழு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபருடன் உரையாடுவதையும், அக்குழுவினர் புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடத்தைப் பார்வையிட்டுத் திரும்புவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- றம்சன்)

## ஜே.வி.பி. உறுப்பினர் வைத்தியசாலையில் மரணம்

ஜனாதிபதித் தேர்தல் வன்முறைச் சம்பவமொன்றில் கடுமையாகத் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மக்கள் விடுதலை முன்னணியின் அம்பலாந்தோட்டை நகரசபை உறுப்பினர் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் உயிரிழந்துள்ளார்.

ஜனவரி 24ஆம் திகதி அம்பலாந்தோட்டையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் படுகாயமடைந்த சந்திரதாச நைதுவாவடு (வயது 51) என்பவரே உயிரிழந்தவராவார். அரசாங்க பாடசாலை ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றும் இவர் காலி பலபிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்ததாக மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-5,9,14)

## தொலைத்தொடர்பு நிர்வாக பணிப்பாளர் பதவி விலகல்

(கொழும்பு)

சிறிலங்கா தொலைத்தொடர்பு நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் நாயகம் பிரியந்தா காரியப்பெருமா தனது பதவியில் இருந்து விலகுவதாக நேற்று அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் பொன்சேகாவை ஆதரித்து வந்த தொலைத்தொடர்பு நிறுவனத்தின் நிர்வாக இயக்கப் பணிப்பாளர் நாயகம் பிரியந்தா காரியப்பெருமா தனது பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

எனினும் அவர் தனது பதவி விலகலுக்கான காரணத்தை தெரிவிக்கவில்லை. காரியப்பெருமா ஜனாதிபதி பணியாளர் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அவரின் புதிய நிலை தொடர்பாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

தொலைதொடர்பு நிறுவனத்தின் நிர்வாக இயக்கப்பணிப்பாளர் நாயகம் பதவிக்கு புதிய ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாக அரசதரப்பு தெரிவித்துள்ளது. அதன் தலைவராக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கா பணியாற்றிவருவது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## குற்றச் செயல்களை கட்டுப்படுத்த இலங்கை அரசு முன்வரவேண்டும்

### சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் ஊடகத்துறை அரசியல் செயற்பாடுகள் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றுக்கு எதிராக மேற்கொள்ளும் வன்முறைகளையும், அடாவடித்தனங்களையும் நிறுத்த வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

தேர்தலுக்கு பின்னர் எதிர்க்கட்சிகளின் பல்வேறு ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல ஊடகங்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. பல ஊடகங்கள் முடக்கப்பட்டன. ஊடகவியலாளர்கள் கைதாகியுள்ளனர்.

தேர்தல் காலங்களில் இவ்வாறான பல சம்பவங்கள் அரங்கேறின. இனியும் அவை நடைபெறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் 85க்கும் அதிகமான வன்முறைகள் பதிவானதாக தெரிவிக்கப்படுகிறது. இவை எதனையும் ஏற்றுக் கொள்ள முடியாது என மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் சரத் பொன்சேகாவை குற்றவாளியாக காட்டுவதற்காக அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற குற்றச் செயல்களும் நிறுத்தப்பட வேண்டும் என அந்த சபை கோரிக்கை விடுத்துள்ளது. (ச-5)

## கோண்டாவில் பிரதேசத்தில் இரவுநேர பொலிஸ் பாதுகாப்பு

கோண்டாவில் பிரதேசத்தில் இரண்டு குழுக்களிற்கிடையில் ஏற்பட்ட மோதலையடுத்து அப்பகுதியில் நேற்று இரவு முதல் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை இரவு அப்பகுதியில் இடம்பெற்ற இசை நிகழ்வொன்றின் போது இரு இளைஞர் குழுக்களிற்கிடையில் ஏற்பட்ட மோதலில் உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் மூவர் வாள்வெட்டிற்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் இரவு இளைஞர் குழுவொன்று சம்பவம் நடைபெற்ற பிரதேசத்திற்குச் சென்று வீதிகளில் நின்று அட்டகாசம் செய்த அதேவேளை அப்பகுதி மக்களது வீட்டு வாசற்கதவுகள், வீட்டுப் பொருட்கள், துவிச்சக்கர வண்டிகள் போன்றவற்றை தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் உசாரடைந்த பொதுமக்கள் சிலர் அப்பகுதியிலுள்ள ஆலயமணியை ஒலிக்கச் செய்ததையடுத்து வீதிக்குப் பொதுமக்கள் திரண்ட போது குறித்த இளைஞர் குழுதப்பிச்சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று பகல்வேளை குறிப்பிட்ட கோண்டாவில் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இருவரை மோதலில் ஈடுபட்ட இளைஞர்குழு பிடித்துச் சென்றதாகவும் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் கோப்பாய் பொலிஸார் மோதல்களை தடுக்கும் நோக்குடன் அப்பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (எ-7,14)

## பல்கலைக்கழக அனுமதிப்படிவம் விநியோகம்

பல்கலைக்கழகங்களுக்கு 2010/2011ஆம் கல்வி ஆண்டுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணபப்படிவங்கள் இன்றுகாலை 10மணி முதல் யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலையில் விநியோகிக்கப்படவுள்ளது. இன்றுமுதல் மூன்று நாட்களுக்கு இரவு 8மணிவரை விண்ணப்படிவங்களைப் பெற் றுக்கொள்ள முடியும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண முகவராக பூபாலசிங்கம் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (சு)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் தீயில் கருகி மரணம்

### சியம்பலாகொடையில் சம்பவம்

(கொழும்பு)

சியம்பலாகொடை கஹதுடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிரிஸ்ஹேன தோட்டத்தில் ஒன்பது வயதுச் சிறுவன் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் தீக்காயங்களுடன் நேற்று செவ்வாய்க்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

குமாரகே தசாநாயக்க (வயது 45), சஹன் திசந்த (வயது 9), குமாரகே செவ்வந்தி (வயது 19), குமாரகே மதுஷானி (வயது 15) ஆகிய, தந்தை உட்பட மூன்று மகள்மாரும், மகனுமே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.

மத வேறுபாடுகளினால் தாயுடன் வாக்குவாதப்பட்ட தந்தை, தமது குடும்பத்தினர் உறங்கிக் கொண்டிருந்த வேளை அவர்கள் மீது பெற்றோலைக் கொட்டியுள்ளார். அதன் பின்னர் தனக்குத் தானே தீயிட்டுக் கொண்டு அவர்கள் மீது பாய்ந்து கொலை செய்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தில் கடுமையான காயங்களுக்குள்ளான மனைவி களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலதிக விசாரணைகளை கஹதுடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

## தேர்தல் முறைகேட்டுக்கான ஆதாரங்கள் கண்டுபிடிப்பு

### ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெற்ற முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் பொன்சேகாவுக்கு அளிக்கப்பட்ட வாக்கு அட்டைகள் பெருமளவில் இரத்தினபுரி பகுதியில் உள்ள குப்பை தொட்டியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

நடைபெற்ற முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகாவுக்கு அளிக்கப்பட்ட வாக்கு அட்டைகள் பெரும் குவியல்களாக இரத்தினபுரி பகுதியில் உள்ள தொழில்நுட்ப கல்லூரிக்கு அண்மையாக உள்ள குப்பைத் தொட்டிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான தகவல்களை ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கொரல தெரிவித்துள்ளார். எரிந்த நிலையில் பெருமளவான பயன்படுத்தப்பட்ட வாக்காளர் அட்டைகள் அங்கு காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரால் கைப்பற்றப்பட்ட வாக்காளர் அட்டைகளில் 60 வீதத்திற்கும் மேலானவை பொன்சேகாவுக்கு ஆதரவாக புள்ளடியிடப்பட்டவை. அவை தேர்தல் அதிகாரிகளால் முத்திரை குத்தப்பட்டு, கையொப்பம் இடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொன்சேகாவுக்கு ஆதரவான வாக்கு அட்டைகளை செல்லுபடியற்றவை என நிராகரித்துள்ள தேர்தல் அதிகாரிகள், அவற்றை 65 அட்டைகள் கொண்ட கட்டுக்களாக அகற்றியுள்ளனர். பொதுவாக ஒரு தொகுதியில் 50 அட்டைகள் கட்டப்படுவதுண்டு. எனவே 65 வாக்காளர் அட்டைகளை 50 ஆக அவர்கள் கணக்கிட்டுள்ளனர்.

இந்த ஆதாரங்களை சமர்ப்பிப்பதற்காக ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துக்கொரல, பிரதி தலைவர் கரு ஜெயசூரியா உட்பட பல உறுப்பினர்கள் அஸ்கிரிய, மல்வத்த, அமரபுர ஆகிய பீடங்களை சேர்ந்த பிரதம மதகுருக்களை சந்திப்பதற்கு சென்றுள்ளனர்.

எனினும் தமக்கு இது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கவில்ல என தெரிவித்துள்ள தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் அட்டைகளை ஆறு மாதங்களுக்கு முன்னர் அழிப்பது குற்றமாகும் என தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் நடைபெற்ற மிகப்பெரும் தேர்தல் மோசடிகள் தொடர்பில் கிடைத்துள்ள இந்த ஆதாரங்களை வெளிநாட்டு தூதுவர்களுக்கு காண்பிக்கப் போவதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)



# இன்று ஒரு தகவல்

## தவளையின் தலைக்கனம்

ஓர் ஊரில் ஒரு பெரியவர் இருந்தார்.

அவர் சொல்லும் அறிவுரைகளைக் கேட்பதற்காக பலர் அவரைத் தேடி வருவதுண்டு.

ஒருநாள் அவர் உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தார். சீடர்கள் பலர் எதிரில் உட்கார்ந்து அவரது அறிவுரைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்தச் சமயத்தில் புதிதாக ஒரு ஆள் வந்தான்.

மிகவும் அடக்கமாக ஒரு மூலையில் உட்கார்ந்தான். உபதேசத்தைக் கேட்டான்.

யாரிடமும் எதுவும் பேசவில்லை. கடைசிவரைக்கும் அமைதியாக இருந்து கேட்டுவிட்டு அவன் பாட்டுக்கு எழுந்து போய் விட்டான்.

அதன் பின் தினமும் வர ஆரம்பித்தான்.

அவனுடைய அடக்கம்– பணிவு எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்தது.

ஒருநாள் அந்தப் பெரியவரும் அவருடைய இன்னொரு சீடரும் வெளியூருக்குப் போனார்கள்.

போகும் வழியில் ஒரு நதி. அதைக் கடந்து போக வேண்டும். படகில் ஏறி உட்கார்ந்து அடுத்த கரையில் போய் இறங்கினார்கள்.

அங்கே ஒரு ஆள் உட்கார்ந்திருந்தான்.

அவன் மிகவும் உல்லாசமாக காற்று வாங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

இவர்கள் முதலில் அவனைக் கவனிக்கவில்லை.

“ என்ன... எப்படியிருக்கிறாய்?. சௌக்கியமாக இருக்கிறாயா?” என்று பெரியவரைப் பார்த்துக் கேட்டான்.

அதற்குப் பின்னர்தான் இவர்கள் அவனைப் பார்த்தார்கள். இவர்களுக்கு ஆச்சரியம்!

வழக்கமாக வந்து பணிவாக உட்கார்ந்து உபதேசம் கேட்டுக் கொண்டு போவானே... அதே ஆள் தான்!

அவ்வளவு அடக்கமாக இருந்தவன், இப்பொழுது ஆணவத்துடன் மரியாதையில்லாமல் பெரியவரைப்பார்த்து ‘‘எப்படியிருக்கிறாய்?’’என்கிறானே கூட வந்த சீடனுக்குக் கோபம்.

பெரியவர் முகத்தில் இலேசான புன்னகை.

ஒன்றும் பேசாமல் இவர்கள் பாட்டுக்கு வந்தார்கள்.

சிறிது தூரம் வந்ததும் சீடன் “இவன் பேசிய தோரணையே சரியில்லையே” என்றான்.

“இவனுக்குப் பணம் கிடைத்திருக்கிறது. அதனால் தான் இப்படிப் பேசுகிறான்” என்றார் குரு.

“பணம் கிடைத்தால் இப்படிப் பேசுவதா?”

“ இவன் மட்டும் இல்லை... மனித இயல்பே பணம் வந்தால் மாறிப் போய்விடும்! இவன் ஒரு சராசரி மனிதன். என்ன பண்ணுவான்... பாவம்!”

“பணம் வந்தால் மனம் தடுமாறும் என்று சொல்கிறீர்களா?”

“தவளையே தடுமாறிப்போன கதை தெரியுமா உனக்கு?”

“தெரியாதே”

“ சொல்கிறேன் கேள்.” பெரியவர் சொல்லத் தொடங்கினார்.

ஓர் ஊரில் ஒரு தவளை இருந்தது. மற்ற தவளைகள் போலல்லாமல் இதன் தலை கொஞ்சம் நிமிர்ந்தது.

ஒருநாள் யானை ஒன்று அந்தத் தவளையைத் தாண்டிப் போனது. அவ்வளவு தான்! தவளைக்குக் கோபம் வந்து விட்டது.

உடனே வளையிலிருந்து வெளியே வந்தது.

அந்த யானையை எட்டி உதைப்பதற்காக காலைத்தூக்கியதாம். அதுமட்டுமல்ல,“ உனக்கு எவ்வளவு துணிச்சல்? என்னைத் தாண்டிக் கொண்டு போகிறாய்?” என்று வேறு மனதுக்குள் நினைத்ததாம்.

சீடன் சிரித்தான்.

“ஏன் சிரிக்கிறாய்? என்று கேட்டார் பெரியவர்.”

“அந்தத் தவளை நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது”

“அது ஏன் அப்படி நடந்து கொண்டது தெரியுமா?”

“தெரியவில்லையே?”

“அந்தத்தவளை தன்வளைக்குள் ஒரு ரூபாய் வைத்திருந்ததாம். அதனால் தான்!”

சீடன் யோசிக்க ஆரம்பித்தான்.

அவனுக்குப் புரிய ஆரம்பித்தது.

ஒரு ரூபாய் காசு ஒரு தவளையையே அப்படிப்பேச வைத்து விட்டதென்றால்...

மனிதனின் கையில் பணம் வந்தால் அவனுடைய மனம் சும்மா இருக்குமா?

இன்றைக்கு நாம் காத்துக் கொண்டிருக்கும் பல குற்றங்களுக்கு அடிப்படைக் காரணம் பணம் தான்.

அதற்காகப் பணத்தைக் குறை கூற முடியாது. அதைக் கையாளத் தெரியாத மனிதன் தான் குற்றவாளி.

மனித இயல்பு மாறக்கூடிய அளவுக்குப் பணத்துக்கு அடிமையாகி விடக் கூடாது. அதுதான் முக்கியம்.

ஒரு பணக்கார எறும்பு நடந்து போய்க் கொண்டிருந்ததாம். அதன் பின்னால் நான்கு எறும்புகள் வரிசையாக போய்க் கொண்டிருந்தது.

அந்த வழியாக ஒரு யானை வந்தது. அது நினைத்ததாம்.

“ ஐயோ பாவம், நாம் குறுக்கே போனால் எறும்புகள் மிதிபடும். அதனால் விலகிப்போகலாம்” என்று நினைத்துக் கொண்டு ஒதுங்கிப் போனதாம்.

அதைப் பார்த்துவிட்டு அந்த எறும்பு மற்ற எறும்புகளிடம் சொன்னதாம்.

“அதோ பாருங்கள்... நம்மைப் பார்த்து விட்டு அந்த யானை பயந்து போய் ஓடுகிறது.

பாவம் அதை ஒன்றும் செய்யாதீர்கள்.

விட்டுவிடுங்கள். பிழைத்துப் போகட்டும்” என்றதாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் மொழி அமுலாக்கல் செயற்திட்டம் இம்மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிப்பு

(கொழும்பு)

சகல அரசாங்க நிறுவனங்களிலும் தமிழ் மொழியை முழுமையாக அமுல் படுத்துவதற்காக முதற்கட்டமாக இம்மாதம் சகல அமைச்சு செயலாளர்களையும் அறிவூட்டவுள்ளதாக அரசியல் விவகார தேசிய நல்லிணக்க அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதற்கமைய அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அமைச்சின் செயலாளர்கள் , மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள் , திணைக்கள தலைவர்கள், உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள் , மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர்கள் ஆகியோருக்கு சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.இதன்படி சகல அரசாங்க நிறுவ னங்களிலும் அரச கரும மொழியை நடைமுறைப் படுத்தும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தங்களுக்குக் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தமிழ் மொழி அமுலாக்கல் தொடர்பில் அறிவுறுத்தல் வழங்குமாறும் அமைச்சின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அரச கரும மொழியை அமுல்படுத்தும் பொறுப்பு தற்பொழுது அரசியல் விவகார தேசிய நல்லிணக்க அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி ஜனாதிபதியின் வழிகாட்டலுடன் தமிழ் மொழியை சகல அரச நிறுவனங்களிலும் அமுல்படுத்த காத்திரமான பல நடவடிக்கைகளை முன் னெடுத்து வருவதாகவும் ஒவ்வொரு அரச நிறுவனத்திலும் தமிழ் மொழியை அமுல்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளை அடையாளங் கண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரச நிறுவன தலைவர்கள் கோரப்பட்டுள்ளனர். இதன் அடிப்படையில் குறித்த நிறுவனத்தில் தமிழ் மொழியைஅமுலாக்க தேவையான நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

மேலும் அரசகருமமொழிக்கொள்கையை முழுமையாக அமுல் படுத்தும் நோக்கத்துடன் அரச ஊழியர்களுக்கு இரண்டாம் மொழியை கற்பிக்கும் நடவடிக்கையும் அமுல் படுத்தப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு நிறுவனத்திலும் உள்ள ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இரண்டாம் மொழி கற்பிக்கப்பட்டு வருவதோடு இரண்டாம் மொழியைக் கற்றவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு பதவி உயர்வு என்பனவும் வழங்கப்பட்டு வருவதாகவும் அரசியல் விவகார தேசிய நல்லிணக்க அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (2-6)

# புதிதாக இரண்டாயிரம் கிராமசேவகர் நியமனங்களை வழங்க அரசு திட்டம்

(கொழும்பு)

வடக்கு,கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் நிலவும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கிராம சேவகர் வெற்றிடங்களை நிரப்பவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னதாக மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு உத்தேசித்துள்ளதாக அமைச்சின் உயரதிகாரி யொருவர் தெரிவித்தார்.

கடந்த வருடத்திலும் பெருமளவிலான கிராம சேவகர் வெற்றிடங்களை நிரப்ப முடிந்துள்ளதுடன் தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்பும் வகையில் அதற்கான விண்ணப்பங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுபோட்டிப் பரீட்சைகள் மூலம் தகுதி யானவர்கள் நிய மிக்கப்படவுள்ள தாகவும் அவர் குறிப் பிட்டார்.

வடக்கு, கிழக்கில் தற்போது 322 கிராம சேவகர் வெற்றிடங்கள் உள்ளன. இதன்படி கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் 85 வெற்றிடங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 59 வெற்றிடங்களும் திருகோணமலை மாவட்டத்தில் 43 வெற்றிடங்களும் உள்ளன. வடக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 43 வெற்றிடங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 25 வெற்றிடங்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 23 வெற்றிடங்களும் மன்னார் மாவட்டத்தில் 31 வெற்றிடங்களும் வவுனியா மாவட்டத்தில் 13 வெற்றிடங்களும் உள்ளன. இவற்றை விரைவாக நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (6)

# நிவாரண நிதி அதிகரிப்பு

எதிர்வரும் வரவு செலவுத்திட்டத்தில் பொதுமக்களுக்கான நிவாரண நிதியை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கான நிவாரணத் தொகைகள் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

# இராசி பலன்

*03-02-2010*
*தை 21 புதன்கிழமை*
*பஞ்சமி பின்னிரவு 2.24 மணிவரை*
*உத்தரம் முற்பகல் 7.34 மணிவரை*
*இராகுகாலம் 12.35-2.05 மணிவரை*
*சுபநேரம் 5.05-6.35*
*அமிர்தசித்தம்*

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியநிலை, விருந்துபசாரம், சத்துருஜெயம். |
| இடபம் | வியாபார விருத்தி, புத்திரரால் கவலை, காரியதாமதம், ரோக நிலை. |
| மிதுனம் | தாய்வழி உறவு, சுபசெலவு, மனச்சஞ்சலம் ,முயற்சி தாமதம். |
| கடகம் | எடுத்த காரியம் கைகூடும், விருந்துபசாரம், உறவினர் சந்திப்பு, மனமகிழ்ச்சி. |
| சிங்கம் | கடின வார்த்தை, தொழிலில் ஆர்வம், தனவிரயம், போசன சுகம். |
| கன்னி | கற்பனை மிகுதி, பெரியோர் உதவி, சயனசுகம், புதிய பொருள், சேர்க்கை. |
| துலாம் | காரிய அலைச்சல், சுப செலவு, நண்பர்கள் சந்திப்பு, சயன சுகக் குறைவு. |
| விருச்சிகம் | நண்பர்கள் சந்திப்பு, தடைப்பட்ட காரியம் கைகூடும், ஜன வசியம், தனவருவாய். |
| தனுசு | சுபநிகழ்வு, நண்பர்கள் உதவி, காரியசித்தி, ஆரோக்கிய விருத்தி. |
| மகரம் | ஆன்றோரால் கௌரவிக்கப் படுதல், உடல் உழைப்பு, பயணம், கட்டுப்பாடு. |
| கும்பம் | எதிர்பாராத அச்சம், போசன நன்மை, உடல்நலக் குறைவு, வாகன பயம். |
| மீனம் | அபூர்வ சந்திப்பு, பணவருவாய், போசன சுகம், கௌரவமான நிலை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 150 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 170 |
| தக்காளி | 120 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 70 | 80 | 90 |
| கரட் | 120 | 140 | 130 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 90 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 120 | 140 | 130 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 120 | 140 | 160 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 140 | 120 |
| கத்தரி தம்புள்ள | 40 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 70 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 30 |

# வட்டு .யாழ்ப்பாணக் கல்லூரியினரின் டெங்கு விழிப்புணர்வு பிரசாரம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி சமூகத்தால் மாணவர்களுக்கு டெங்கு நோய் தடுப்பு தொடர்பான விளக்கமளிக்கும் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டதோடு டெங்கு நோயையைத் தடுப்பதற்கான வழி வகைகள் அடங்கிய பதாகையும் திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் இன்று வெகு வேகமாக பரவி மக்களின் உயிரைக் காவுகொண்டு வருகின்ற இக் கொடிய நோயில் இருந்து மாணவர்களையும் ஏனையவர்களையும் காப்பாற்றும் நோக்கோடு நாம் உடனடியாக இப்பிரசார மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கையினை மேற்கொண்டுவருவதாக கல்லூரி முதல்வர் என்.ஏ. விமலேந்திரன் தெரிவித்தார்.

இவ் விழிப்புணர்வு நிகழ்வில் மாணவர்கள் ஆர்வத்தோடு பங்குபற்றி வருவதோடு கல்லூரி சமூகத்தால் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாடகம் மற்றும் பல்வேறு வேலைத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-27)

# வீதி விளக்குகள் எரியாததால் சிரமத்துக்குள்ளாகும் பொதுமக்கள்

(வட்டுக்கோட்டை)

வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அராலி,சுழிபுரம்,வட்டுக்கோட்டை பகுதிகளில் வீதி மின் விளக்குகள் இல்லாமையினால் இருக்கின்ற மின் விளக்குகள் பழுதடைந்து காணப்படுவதாலும் பல்வேறு அவஸ்தைக்கு உள்ளாகிவிடுகின்றதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி வீதிகளில் இரவு வேளைகளில் பயணிக்கின்ற பாதசாரிகளும் ஏனைய பொது மக்களும் பல்வேறு இடங்களில் விபத்துக்களுக்குள்ளாவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இப் பகுதிகளில் வீதி மின் விளக்குகள் பொருத்தி பொதுமக்களின் பாவனைக்கு உதவுமாறு பல்வேறு முறை கோரிக்கை எடுக்கப்பட்ட போது இது சம்பந்தப்பட்டோர் அசமத்தப் போக்கை கடைப்பிடித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே மேற்படி பகுதிகளில் உடனடியாக வீதி விளக்குகளைப் பொருத்தி உதவுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டிக் கொள்கின்றார்கள். (27-2)

# வன்னியிலிருந்து குடாநாட்டிற்கு எடுத்துவரப்படும் இறைச்சி வகைகள்

(திருநெல்வேலி)

வன்னிப்பகுதியில் இறைச்சி வகை மிகக் குறைவான விலையில் விற்கப்படுவதால் வன்னிப்பகுதியூடாக போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் மாங்குளம்,கிளிநொச்சிப் பகுதிகளில் இருந்து இறைச்சியை குடாநாட்டுக்கு பெருமளவில் எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அங்கு ஆட்டிறைச்சி ஒரு கிலோ கிராம் 150 ரூபாவாகவும், மாட்டிறைச்சி ஒரு கிலோ கிராம் 100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அங்கிருந்து குடாநாட்டிற்கு கால் நடைகளைக்கொண்டுவருவதற்கு படையினரின் அனுமதி வழங்கப்படுவதால் அதிக அளவில் கால்நடைகளைக்கொண்டு வருவதால் யாழப்பாணத்தில் இறைச்சி வகைகளை குறைந்த விலையில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-4-43)

# கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தினரால் பயனாளிகளுக்கான வீடுகள் நிர்மாணிப்பு


(யாழ்ப்பாணம்)

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தினால் நாவாந்துறை,குருநகர்,கொய்யாத்தோட்டம் ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்த 23 பயனாளிகளுக்கு 2.5 மில்லியன் செலவில் அரை நிரந்தர வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விளான் பண்டத்தரிப்பு பிரதேசத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட போரினால் பாதிக்கப்பட்ட 15 பயனாளிகளுக்கு 9 இலட்சம் ரூபா செலவில் மலசலகூடம் அமைக்கப்பட்டு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நாவாந்துறை சென் நீக்கலஸ் றோ.க பாடசாலைக்கு 2 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா நிதிச்செலவில் வகுப்பறைக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளதாக கரிதாஸ் கியூடெக் நிறுவனம் தெரிவித்துள்ளது. (4)

# சர்வதேச மாநாட்டில் பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் தோற்றி A, 2B பெறு பேற்றினை பெற்றவட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவனான ஜோதிவேல் - கோடன் இந்திய கேரளா இராஜகீரிய பல் கலைக் கழகத்தில் இம்மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சர்வதேச இளைஞர்களுக்கும் பல்கலைக் கழக புகுமுக மாணவர்களுக்குமான சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார். இம் மாநாட்டில் இலங்கையில் இருந்து 5 பேர் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-4-27)

# மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு




நிகழ்வில் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் உரையாற்றுவதையும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் மாணவி ஒருவருக்குப் கொப்பிகள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் அடிப்படை வசதி குறைந்த மாணவர்களுக்கும் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களிற்கும் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சாவகச்சேரி, நெல்லியடி, மானிப்பாய், கோண்டாவில், கொக்குவில், வேலணை, யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய பிரிவுகளிலுள்ள பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 300 மாணவர்களிற்கு கல்விசார் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

கடந்த 30ஆம் திகதி சனிக்கிழமை யாழ். பல நோ.கூ. சங்க மண்டபத்தில் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், உதவிப் பிரதேச செயலர் யாழ்ப்பாணம், திருமதி அ.சாந்தசீலன், யா/உரும்பிராய் சந்திதேராதயா வித்தியசாலை அதிபர் வி.பிறேமதாஸ், நிலையத்தின் சட்ட உதவிப் பிரிவின் சட்டத்தரணி மு.றெமீடியஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (2-4)




# சிவராத்திரியை முன்னிட்டு சைவசமயப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்கு கண்ணகா ஸ்ரீ பரமேஸ்வரி கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தினால் மகா சிவராத்திரியை முன்னிட்டு நடத்தப்படுகின்ற ஸைவ சமயப் போட்டி எதிர்வரும் 6,7ஆம் திகதிகளில் காலை 8 மணிக்கு உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டி எழுத்துப்பரீட்சை ,எழுத்துப் பரீட்சை,பேச்சு ,பண்ணிசை என்ற முறையில் மூன்று பிரிவாக நடத்தப்படவுள்ளதுடன் முதல் பிரிவில் தரம் 3 முதல் 5 வரையும், இரண்டாவது பிரிவில் தரம் 6 முதல் 8 வரையும் மூன்றாவது பிரிவில் தரம் 9 முதல் 13 வரையுமாக நடத்தப்படவுள்ளது.

மேலும் இப்போட்டியில் உரும்பிராய் இந்துக்கல்லூரி,உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்,வசாவிளான் மகாவித்தியாலயம், உரும்பிராய் சந்திரோதயபாடசாலை ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களும் தனியார் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்களும் பங்குபற்ற முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

இப்போட்டிகள் மாணவர்களிடையே சைவ சமய அறிவை வளர்ப்பதோடு நல்ல மாணவர் சமூகத்தை வளர்க்கும் நோக்குடனே நடாத்தப்படுவதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (2-4)

# ஆதனவரி அறவீட்டிற்கான 10 வீத வரிக்கழிவு வழங்குவதற்கான கால எல்லை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

2010 ஜனவரி மாதத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் காரணமாக யாழ். மாநகரசபையில் சில வேலை நாட்கள் முழுமையாக நடைபெற முடியாமல் போனதனால் பொதுமக்களின் நன்மைகருதி சோலை வரிக்கான 10 % கழிவு வழங்கும் காலத்தினை ஜனவரி மாதம் 31 ஆம் திகதியிலிருந்து எதிர் வரும் 10ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோ. பற்குணராசா அறிவித்துள்ளார்.

அத்துடன் மேற்படி கால நீடிப்பினை பொது மக்கள் யாவரும் சாதகமாகப் பயன்படுத்தி 2010 ஆம் ஆண்டுக்கான வரியினை 10.02.2010க்கு முன் செலுத்தி தங்களுக்குரிய 10 % கழிவினை பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுகொள்கின்றார். (6)

# மீள்குடியேறியோருக்கான 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்குரிய மீள் குடியமர்வு கொடுப்பனவான ரூபா 20 ஆயிரத்தை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர் எதிர்வரும் 10ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்திற்கு உரிய ஆவணங்களுடன் சமூகமளித்து கொடுப்பனவை பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (4)

# பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மயிரிக்கூடல் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலய பாலஸ்தாபனம் இன்று புதன்கிழமை காலை 9.07 மணி முதல் 12.29 மணி வரையுள்ள சுபவேளையில் ஆலயகுரு சிவஸ்ரீ கு.சண்முகராஜருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)




# இலங்கையின் பொருளாதாரத்தில் இந்தியாவின் தலையீடு

08

எனவே இவற்றை தனித்தனியாக ஆராய வேண்டும். சோமவன்ச கூறியதை போன்று, இந்தியா ராஜதந்திர ரீதியிலும், யுத்த ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் எம்மீது அழுத்தத்தைக்கொடுக்கிறது. உதாரணமாக, இந்தியா இலங்கை ஒப்பந்ததை எடுத்துக் கொள்வோம் அல்லது சமீபத்தில் 2002-2003 கால கட்டத்தில் எமது நாட்டுடன் இந்தியா உடன்படிக்கையொன்றில் ஒப்பமிட்டது. யாழ்ப்



பாண பலாலி விமான ஓடு பாதையை செப்பனிட தாம் விரும்புவதாக இந்தியா கூறியது. அதற்காக ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள முயற்சி செய்தது. இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட கால கட்டத்தில் ஐ.தே. கட்சியே ஆட்சியில் இருந்தது. பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர் ஒஸ்டின் பர்ணாந்து. அவர் சமீபத்தில் **My Belt is white** என்ற பெயரில் நூலொன்றை எழுதியுள்ளார். மேற்படி நான் கூறிய விடயங்கள் இந்த நூலில் எழுதப்பட்டுள்ளன. பலாலி விமான நிலைய ஓடுபாதையை செப்பனிடும் பணிக்காக 3 நிபந்தனைகள் முன் வைக்கப்பட்டன. அந்த நிபந்தனைகள் எவை? ஒன்று பாதை செப்பனிடப்பட்ட பின்னர் மூன்றாவது சாராருக்கு பயன்படுத்த



அனுமதிக்கக் கூடாது. அப்படியானால் இதை யார் பயன்படுத்த வேண்டும் என்பதை தீர்மானிப்பது யார்? இந்தியா ! இது எமது நாட்டு இறைமையை மீறும் செயல். எமது நாட்டில் உள்ள விமானப் பாதையொன்றை பயன்படுத் தக்கூடியவர் யார்? பயன்படுத்தக் கூடாதவர் யார்? என்பதை தீர்மானிக்க வேண்டியது இந்தியா அல்ல. நாம் ! எமது நாடு! அடுத்தாக , இந்தியாவுக்குத் தேவைப்படும் போது அந்தப் பாதையை எந்த நேரத்திலும் இந்தியாவின் பயனீட்டுக்கு கட்டாயமாக ஒப் படைக்க வேண்டுமெனவும் அந்த ஒப்பந்தம் கூறுகிறது. ஏதோவொரு காரணத்தால் அந்த ஒப் பந்தம் கைவிடப் பட்டது. இந்தியா இலங்கையின் மீது எவ்வாறு அழுத்தம் கொடுக்கின்றது என்பது இதிலிருந்து தெரியவருகிறது.

பொருளாதார ரீதியிலும், ராஜதந்திர ரீதியிலும் இலங்கை மீது அழுத்தம் கொடுத்து இந்தியா கொள்ளையடிக்கப் போகும் பெறுமதிக்க வளங்கள் எவை யென்பதை பார்ப்போம். உங்களுக்குத் தெரியும். எமது பாதுகாப்புப்படையினர் தீரத்தோடு போராடி கிழக்கு மாகாணத்தை மீட்டெடுத்தனர். இது அனைத்து ஊடகங்களிலும் வெளியிடப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் தொப்பிகல பிரதேசத்தை கைப்பற்றி இலங்கை இராணுவம் தேசியக் கொடியை ஏற்றியது. புலிகளை விரட்டியடித்து வெற்றி கொண்ட கிழக்கு மாகாணத்தில்,துறை முகத்தை அண்டிய பிரதேசத்தில் 675 சதுர

**இலங்கையில் இந்தியாவின் தலையீடு தொடர்பில் கண்டியில் இடம்பெற்ற பகிரங்க உரையில் டில்வின் சில்வாவினால் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவின் கருத்துக்கள் தொடராக பிரசுரமாகின்றது.**

கிலோமீற்றர் பரப்புள்ள நிலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒப்பந்தத்துடன் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கையின் முதலீட்டுச்' சட்டமூலத்தின் கீழ் விசேட பொருளாதார வளையம் என்ற வகையில் வழங்கப்பட்டுள்ளது. இதிலுள்ள விசேடத் தன்மை என்ன தெரியுமா? இந்த பொருளாதார வலையத்துக்குள் இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினர் கூட செல்ல முடியாது. எமது பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேகர அதனைப் பார்வையிடச் சென்ற போது திருகோணமலை அரசாங்க அதிபர் அவரை அனுமதிக்கவில்லை. இங்குயாரும் செல்ல முடியாதெனத் தடுத்து விட்டார். எமக்குக் கிடைத்த தகவல்களுக்கேற்ப, இந்த விசேட வர்த்தக வலயத்தில் வேலை செய்யும் இந்தியத் தொழிலாளர்களைப் பற்றி யாருக் கும் தெரியாது. அங்கு யார், யார், செல்கிறார்கள் என்பதும் யாருக்கும் தெரியாது. இன்ன இன்னார் தான் இங்கே வேலை செய்கிறார்கள் என்று இந்திய அதிகாரிகள் அரச அதிபரிடம் கூறுகின்றனர். பெரும் பாலான இந்தியர்கள் அங்கு வேலை செய் கின்றனர். இந்திய அதிகாரிகள் தரும் பட்டியலை வைத்துக் கொண்டு நாம் வெறுமனே இருக்க வேண்டும். இவ்வாறான மர்ம மொன்று இந்த வலயத்துக்குள் இருக்கிறது . இலங்கை முதலீட்டுச் சபையின் சட்ட மூலத்தினூடாக ஜனாதிபதியே இதனை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். ஜனாதிபதியினால் ஒப்பமிடப் பட்ட வர்த்தமானியில் கீழ் கண்ட வாறு இருக்கிறது.

1978இல. 4 கொண்ட இலங்கை முதலீட்டுச் சபை சட்ட மூலத்தின் 22 (அ) உறுப்புரையின் மூலம் எனக்கு வழங் கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு ஏற்ப இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் கீழ் காணும் (அ) ,(ஆ), (இ),(ஈ), என்ற உப பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைக்குட்ப்பட்ட பிரதேசத்தை இந்த சட்டமூலத்தின் காரியத் துக்காக அனுமதிப் பத்திரம் பெற்ற வலய மாக கட்டளை பிறப்பிக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ
ஜனாதிபதி
2006 செப்ரெம்பர் 30 –கொழும்பு

2006 செப்டெம்பர் 30ஆம் திகதி தான் இந்தப் பிரதேசம் ஜனாதிபதியால் இந்தியாவுக்கு வழங்கப்படுகிறது. இந்த பிரதேசத்தில் கப்பல் திருத்தம் நிறுவனமொன்றை அமைக்கத் திட்டமிட்டிருப்பதாகக் கூறும் இந்தியா படகு உற்பத்தி, மீன் உற்பத்தி நடவடிக்கைகள் அத்தோடு மேலும் பல தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கப்படுமென கூறுகிறது. இந்த விசேட வர்த்தக வலயத்தை 6 பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அந்த 6 பிரிவுகளும் கீழ்க் காண்டவாறு இருக்கிறது. நகர்புற நடவடிக்கைகள் தொடர்பான 4 0 சது கிலோமீற்றர். உல்லாசப் பிரயாண அபிவிருத்தி வலயம் 62 சதுரகிலோ மீற்றர், கமத் தொழில் திட்ட வலயம் 180 சதுர கிலோ மீற்றர், சுற்றாடல் உல்லாசப் பிரயாண வலயம் 146 வர்க்க கிலோ மீற்றர், தொழில் துறை அபிவிருத்தி வலயம் 168 ச.கி.மீ, வதிவிட வலயம் 81 ச.கி.மீ. இவற்றைக் கூட்டினால் கிட்டத்தட்ட 678 சதுரகிலோ மீற்றர் ஆகிறது. இந்த 678 ச.கி.மீ என்பது எவ்வளவு விசாலமான 'நிலப்பரப்பு? கொழும்பு மாவட்டத்தைப் போன்று விசாலமான பிரதேசம் பாது காப்புப் படைவீரர்களைால் மீட்டெடுக்கப்பட்ட கிழக்கு மாகாணத்திலிருந்து கொழும்பு மாவட்டத்தைப் போன்றதொரு விசாலமான பிரதேசத்தை பொருளாதார வலயம் என்ற ரீதியில் இந்தியாவிடம் ஒப்படைக்கப் படுகிறது.


| வலய இல | விபரம் | ச.கி.மீ |
|---|---|---|
| 01 | துறைமுக மற்றும் நகர்ப்புற நடவடிக்கைகள் வலயம் | 40.40 |
| 02 | உல்லாசப் பிரயாண அபிவிருத்தி வலயம் | 62.36 |
| 03 | கமத்தொழில் திட்டவலயம் | 180.14 |
| 04 | கைத்தொழில் அபிவிருத்தி வலயம் | 168.48 |
| 05 | சுற்றாடல் அபிவிருத்தி வலயம் | 146.16 |
| 06 | வதிவிட வலயம் | 81.45 |
| | முழு நிலப்பரப்பினதும் மொத்தத் தொகை | 678.99 |

திருகோணமலை விசேட வர்த்த வலய உப வலயம்



அந்தப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் அகதிமுகாம்களில் வாழும் நிலையிலேயே இது வழங்கப்பட்டிருக்கிறது. புலிகள் சாம்பூரைத் தாக்கியது உங்களுக்குத் தெரியும். மாவிலாறு மதகு மூடப்பட்டு யுத்தம் துவங்கியதோடு சம்பூர் தாக்கப்பட்டது. சம்பூர், கிண்ணியா முஸ்லிம் மக்கள் அகதி முகாம்களில் தஞ்சமடைந்தனர். அவர்கள் இன்னும் திருகோணமலை அகதி முகாம்களில் வாழுகின்றனர். 5000 க்கும் அதிகமானோர் அங்கிருக்கின்றனர் .இந்த மக்களுக்குச் சொந்தமான நிலம் தான் விசேட வர்த்தக வலயம் என்ற பெயரில் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது 1505 இலங்கைக்கு வந்த போர்த்துக்கீயர்கள் மாட்டுத்தோலை விரித்துக் கொள்ள இடம் கேட்டு கொழும்பு கோட்டையில் பெரும் பகுதியை கைப்பற்றிக் கொண்டதைப் போன்று இந்தியா தனக்கு சமீபமாக உள்ள முக்கியமான பொருளாதார மர்மஸ்தானத்தை யுத்த கேந்திர ஸ்தானம்



வர்த்தக ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமான திருகோணமலை துறை முகத்தைச் சுற்றி இந்த வலயத்தை அமைக்கிறது.

இதனால் இந்த பிராந்தியத்தின் உரிமை இந்தியாவுக்கு கிடைக்கிறது. இலங்கை அரசாங்கத்தின் அனுமதியின்றி இந்தியாவினால் எதுவும் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த பிரதேசத்தில் தான் கோடியார் பற்று இருக்கிறது. அதாவது மூதூர் பிரதேச செயலாளர் பிரிவு மூதூர் பிர தேசத்தின் அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளும் இதில் உள்ளடங்குகின்றன.

அதேபோன்று கிண்ணியா பிரதேச அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளும் உள்ளடங்குகின்றன. அதேபோன்று தம்பலகாமம் தென் பிரதேச செயலாளர் பிரிவின் 12 கிராம சேவையாளர் பிரிவுகளும் 1 கி.மீ. தூர பிரதேசத்தைக் கொண்ட கொழும்பு –திருகோணமலை அதாவது A 6 பாதையின் மேற்குப்புற எல்லைக்கோடு அனைத்து பிரதேசங்களும் இதற்கு உரித்தாகும். திருமலை கடவத்சதர பிரதேச செயலாளர் பிரிவின் அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளும் குச்சவெளி பிரதேசச் செயலாளர் பிரிவின் 14 கிராம சேவையாளர் பிரிவுகளும் 1 கி.மீ.தூர பிரசேத்திற்குரிய கொழும்பு– திருமலை பாதையின் மேல் மத்திய எல்லைக் கோடு அனைத்து பிரதேசங்களும் இதற்கு உரித்தாகும். இவ்வாறு சிங்கள, தமிழ், முஸ்லிம், மக்கள் வாழ்ந்த தொடர்ந்தும் வாழும் விசாலமான பூமி இந்தியாவுக்கு வழங் கப்பட்டுள்ளது.

இவ்வாறு திருமலை பிரதேசத்தில் 675 ச.கி.மீ.நிலம் இந்தியாவுக்கு வழங்கப் பட்டதில் இன்னொரு விடயமும் இருக்கிறது. உங்களுக்குத் தெரியும் கிழக்கு மாகாணத்தில் திருமலைக்கு மேல்பக்கமாக புல்மோட்டை என்ற பகுதி இருக்கிறது. நிலாவெளி புல்மோட்டை ஆற்றுக்கு அருகாமையில் அமைந்திருக்கிறது புல்மோட்டை அந்தப் புல்மோட்டையிலிருந்து திருமலை இறங்குதுறை வரை அதி வேகப்பாதை ஒன்றை இந்தியா நிர்மாணித்து வருகிறது.

**டில்வின் சில்வா**
பொதுச்செயலாளர், மக்கள் விடுதலை முன்னணி

(தொடரும்)

# மகாசிவராத்திரி எப்போது? ஐயந்தெளிவு பெறுவோம்

**2010ஆம் ஆண்டின் மகாசிவராத்திரி எப்போது என்ற குழப்பத்தைத் தவிர்க்க *மெய்கண்டார்* என்ற நூலில் எழுதப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**



எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளான சிவபெருமானை வழிபட்டு பெரும் பேறு பெற்றவர்கள் சைவர்கள். சைவர்களுக்குப் பல சிவ விரதங்கள் இருந்தாலும் அதில் சிறந்த விரதமானது சிவராத்திரி (பூசை) விரதமாகும். சிவராத்திரியானது ஒவ்வொரு மாதமும் தேய்பிறை திரயோதசி சதுர்த்தசி கூடிய நாளில் அனுஷ்டித்து வருவது மாத சிவராத்திரியாகும். விசேஷமாக மாசி மாதத்தில் அனுஷ்டிப்பதை மகா சிவராத்திரியாக சிவாகமங்களும் தர்ம சாஸ்திரங்களும் கூறுகின்றன.

இந்த (விரோதி) ஆண்டில் மகா சிவாரத்திரியை தை மாதத்தில் (12-02-2010) அனுஷ்டிக்க வேண்டுமா? மாசி மாதத்தில் (13.03.2010) அனுஷ்டிக்க வேண்டும்? என்ற கேள் விக்கு விடை காணும் வகையில் கீழ்க் காணும் கட்டுரை அமை கிறது.

மாதமானது சாவனம், சாந்திரம், நட்சத்திரம், சௌரமென நான்கு வகைப்படும். எந்தெந்த விரதத்துக்கு எந்தெந்த மாதம் விதிக்கப்பட்டதோ அந்தந்த விரதத்தை அந்தந்த மாத்திற் செய்தல் வேண்டும் என்று சிந்தியம் என்னும் ஆகமம் கூறும். இந்த பிரமாணத்தால் எந்தக் கர்மாவுக்கு எந்த மானஞ் சொல்லப்பட்டதோ எது அனுஸ்டானத்திலிருந்து வந்ததே அந்தவிதமே நடத்த வேண்டும் என்பது பெறப்படுகிறது.

ஸ்தாபனம் புரோசஷணம் தீசஷா சிவராத்திரி சிவோத்ஸவ:I
சௌரமாஸே துகர்த்தவ்ய: சாந்திரமானோப்ரசஸ்தக:II

(ஸ்தாபனம், சம்புரோசஷணம், தீசைஷ, சிவராத்திரி, சிவோத்சவம் என்பவை சௌரமாதத்திற் செய்யத்தக்கன; சாந்திரமானம் தள்ளத்தக்கது) என வீராகமமும், சிந்தாந்த சேகரமும் விதிக்கின்றன.

ஸ்தாபனம், ப்ரோசஷணம், தீசைஷ, சிவராத்திரி, சிவோத்சவம் என்பவை சௌரமாதத்திற்கு செய்யதக்கன : பவித்திரோற்சவத்தைச் சாந்திமாதத்திற் செய்க என்று சிந்திய விசுவசாதாக்கியம் விதிக்கின்றது. மாதபூஜை முதலியவைகளைச் சௌரமாதத்திற் செய்க: கும்பமாதத்துக்கு கிருஷ்ண சதுர்த்தசியில் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்க என்று பீமசங்கிதை பகருகின்றது.

*துலாஸ்நாந முஷாப்யங்கம் கிருத்திகா தீபமேவச*
*தநுர்மாஸிஹரே : பூஜா சிவராத்ரீ வ்ரதந்ததா!*
*சௌரமானேன கர்த்தவ்யம் சாந்த்தரமானேநகாரயேத்*

துலாஸ்நானம், உஷத்கால அப்பியங்கம், (நரகசதுர்த்தி ஸ்நானம்) கார்த்திகை விளக்கீடு, மார்கழி மாத உக்கால பூஜை, சிவராத்திரி விரதம் என்பவை சௌரமாதத்திற் செய்யத்தக்கன: சாந்திர மாதத்திற் செய்யற்க என்று தர்மசாத்திரச் சுருக்கம் கூறுகின்றது.

சூரியன் மேஷம் முதலிய இராசிகளிற் செல்லும் மாதம் சௌர மாதமென்று சொல்லப்படும். சௌரமாதத்தில் மாத நட்சத்திரம் பிரதானமென்று கூறப்படுகிறது. மேட மாதத்தில் சித்திரை நட்சத்திரம் விசேஷமாகக் கொள்ளப்படுவதால் அந்த மாதம் சைத்திரமென்று சொல்லப்படுகின்றது. இடபமாதத்தில் விசாக நட்சத்திரம் பிரதானமாகக் கொள்ளப்படுதலால் அந்த மாதம் வைசகாமென்று கூறப்படுகிறது. விருச்சிக மாதத்தில் கார்த்திகை நட்சத்திரம் விசேஷமாகையால் அந்த மாதம் கார்த்திகை மாதமென்று சொல்லப்படுகிறது. கும்ப மாதத்தில் மக நட்சத்திரம் விசேஷமாகக் கொள்ளப்படுவதால் அது மாகமாதமென்று சொல்லப்படுகிறது எனக் காரணாகமம் கூறும். மற்றைய மாதங்களுக்கும் இவ்வாறே அவ்வாகமத்திற் சொல்லப்பட்டது. எப்பொழுது சூரியன் கும்பராசியிற் செல்கின்றானோ அந்த மாதம் மாகமாதமென்று நினைக்கத்தக்கது எனப் புரோத்கீதாகமம் பகருகின்றது.

சூரியன் கும்பராசியில் எப்பொழுது செல்கின்றானோ அது தானே மாகமாதமாகும். அம்மாதத்தில் வரும் கிருஷ்ண சதுர்த்தசி நாளில் சிவனைப்பூசிக்க - என்று சூசஷ்மாகமம் கூறுகின்றது.

ஸௌரப் சேஷமாகமாசி கிர்ஷ்ணபசேஷவிசேஷத:I
சதுர்த்தக்யாம் ஜாகருக: சிவராத்திரி விரதம் சரோத்II

சௌரபஷமாக மாகமாதத்தில்; கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் உறக்கமின்றி சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்று பிம்பம் என்னும் ஆகமம் கூறுகின்றது.

கும்பமாதத்து கிருஷ்ணசதுர்த்தசியில் சிவபெருமானைப் பூசித்துச் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்க வேண்டும் என்று கிரணாகமம் செப்புகின்றது. கும்பமாதத்தில் கிருஷ்ண பக்ஷத்தில் வருகிற அஸ்தமனபரியந்தம் வியாப்தியுடன் கூடிய திரயோதசியும் அதற்கு மேல் சதுர்த்தசியுமிருந்தால் அந்த இரவு சங்கரனுக்குப் பிரியமானதாகும் என்று வீராகமம் விளம்புகின்றது. சூரியன் கும்பராசியை அடைந்த காலமே மாகமென்ற பெயரை அடைகின்றது. அந்த மாகமாத கிருஷ்ணசதுர்த்தசி மகாநிசியில் சிவராத்திரி பூஜை செய்ய வேண்டுமென்று வேறோராகமத்தில் விதிக்கப்பட்டது. லளிதம் முதலியவற்றிலும் இவ்வாறே சொல்லப்பட்டிருக்கிறது. சூரியன் கும்பராசியில் செல்கின்ற மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணசதுர்த்தசி சிவராத்திரியாகும். அது கோடிபாவங்களை நாசஞ்செய்யும் எனப் பராசரம் பகருகின்றது. ராத்திரி முழுவதும் தைமாதத்தையடைந்த சிவராத்திரியானது பாவத்தைக் கொடுக்கக்கூடியது; விதிக்கப்பட்ட காலத்தைச் சேராததால் தள்ளத்தக்கது.

*கும்பரௌவது சம்ப்ராப்தே கிர்ஷ்ணபசேஷ விஷேத:*
*த்ரயதேஸ்யா சதுர்த்த சியாசம்யுக்தே தந்நிசி ஸ்ததா*
*சிவராத்ரிவிரதம் சூர்யாத பரேஹநிபாரணம் கர்விதச் சாந்திர*
*பசேஷது சிவராத்ரிவிரதம் சரேத்*
*தத்ராத்ரீ பூபதீ நாஞ்ச ஐ நாநா மபி ஸர்வச :*
*சிவராத்ரிவ்ரதீ நாஞ்ச ரௌவம் நரகம் பவேத்தத தோஷசம்*
*நார்த் தாய சாந்திராயணவ் ரதம் சரேத்!*
*புனச்சாஸ்த் ரோக்தவத் குர் யாத்சௌர மாஸேவ்ர தம் சதேத்*

(தொடரும்)

தே. சுடலைமுத்து
தலைமையாசிரியர்
ஆதீன நடுநிலைப் பள்ளி, திருவாவடுதுறை.

# கரு ஜெயசூரியாவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டதை ஏற்றுக்கொள்கிறேன்

## கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கப் பாதுகாப்புப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல் இல்லாத காரணத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பல அமைச்சர்களது பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதாகவும் தமது பாதுகாப்பும் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியாவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை தொடர்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் கரு ஜெயசூரியவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை குறித்து அவர் சுமத்தும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்வதாகவும் எனினும் எதிர்வரும் காலங்களில் அமைச்சர்களின் பாதுகாப்பும் படிப்படியாக குறைக்கப்படும் எனவும் கரு ஜெயசூரிய போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது உயிர் அச்சுறுத்தல்கள் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

(2-6)

# அராலி வீதி சேதமாகியுள்ளதால் சிரமத்துக்குள்ளாகும் பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 789 இலக்க பேருந்து பாதையான அராலிப் பதை நீண்ட காலமாக சேதமாகி குன்றும் குழியுமாக காணப்படுவதால் மேற்படி வீதியில் பிரயாணிக்கின்ற மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்வீதியில் தினமும் ஏராளமான மாணவர்களும் பொதுமக்களும் பிரயாணங்களை மேற்கொண்டு வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

எனவே நீண்ட காலமாகத் திருத்தப் படாமலுள்ள இவ்வீதியை உடனடியாக செப்பணிட்டு பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறு இன்றிப் பிரயாணிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தங்கள் கவனத்திற்கு எடுத்து வீதியினை திருத்தி தருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதியின் பொதுமக்கள் வேண்டிக்கொள்கின்றார்கள்.

(2-27)

# வடமாகாணத்தில் சட்ட ஆலோசனை விரிவாக்கல் திட்டம் ஆரம்பம்

## சட்ட ஆலோனைஆணைக்குழ தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாணத்தில் சட்ட ஆலோசனைச் செயற்றிட்டங்களை விரிவுபடுத்தத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கைச் சட்ட ஆலோசனை ஆணைக்குழு தெரிவிக்கிறது.

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் நீதிமன்றங்களில் ஏற்கனவே சட்ட ஆலோசனை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதாகச் சட்ட ஆலோசனை ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.எஸ். விஜயரத்ன குறிப்பிட்டார்.

இந்தச் செயற்றிட்டத்தின் மற்றொரு கட்டமாக முல்லைத்தீவு, கிளிநொச்சி, பருத்தித்துறை, மல்லாகம் மற்றும் சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் சட்ட ஆலோசனை நிலையங்கள் நிறுவப்படவுள்ளதாகவும் முக்கியமாக மீளக்குடியேறிய மக்களின் காணிகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் உள்ளிட்ட ஆவணங்கள் தொடர்பாக ஆராய்தல் போன்ற விடயங்கள் இந்த நிலையங்களூடாக முன்னெடுக்கப்படவுள்ள என்று தெரிவித்தார்.

மேலும் சொந்த இடங்களுக்குத் திரும்பிய மக்களின் அடையாள அட்டைகளைப் பெறும் செயற்பாடுகள், விவாக மற்றும் வதிவிட அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகள் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் இந்த நிலையங்கள் ஆலோசனை வழங்கவுள்ளன.

(2-6)

# குற்றப்புலனாய்வு துறையினரால் சிங்கள ஊடகவியலாளர் கைது

(கொழும்பு)

சரணடைந்த விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டதை நேரில் பார்த்த சிங்கள ஊடகவியளாளர் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின செயலர் கோத்தபாயவின் உத்தரவின் பேரில் இலங்கை இராணுவத்தின் 58ஆவது பிரிவு படையணி தளபதி சவீந்திர டி சில்வா சரணடைந்த விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களை படுகொலை செய்ய கட்டளையிட்டார் என்று முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவுக்கு அப்போது இருந்த சிங்கள ஊடகவியளாளர் தெரிவித்திருந்தார்.

இந்த தகவலை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொன்சேகா கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அத்துடன் இலங்கை அரசுக்கும் சிக்கலை ஏற்படுத்தியது.

தற்போது ஜனாதிபதி தேர்தல் முடிந்து ராஜபக்ஷ மீண்டும் வெற்றி பெற்றுள்ள நிலையில் மேற்கூறிய சிங்கள ஊடகவியலாளரை இலங்கை குற்ற புலனாய்வு துறையினர் கைது செய்துள்ளதாக கூறப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்த பின்னர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று சிறப்பு அறிவுறுத்தலுடன் பாதுகாப்பு அமைச்சகத்தினால் தயாரிக்கப்பட்ட பெயர் பட்டியல் ஒன்று கட்டுநாயக்க விமானநிலையத்தில் குடிவரவு அதிகாரிகளிடம் வழங்கப்பட்டது.

இந்த பட்டியலில் மேற்படி ஊடகவியலாளரின் பெயரும் இடம்பெற்றிருந்தது. இதனையடுத்து குறிப்பிட்ட ஊடகவியலாளரை தேடி அனுப்பப்பட்ட குற்றபுலனாய்வு பிரிவின் விசேட குழுவினர் அவரை கடந்த வெள்ளி இரவு கைது செய்துள்ளனர்.

பொன்சேகா தலைமையிலான குழுவினரின் பேச்சாளராக பணியாற்றும் பொறுப்பு பொன்சேகா தரப்பினரால் இந்த ஒரு ஊடகவிலாளருக்கே வழங்கப்பட்டிருந்தது என்று குற்ற புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலை அடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# இலங்கைக்கான ஐ.நா.வின் நிதியுதவி அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் 2010 ஆண்டு செயற்றிட்டங்களுக்கான நிதியுதவியை ஐக்கிய நாடுகள் சபை அதிகரித்துள்ளது. அதன் படி உலக உணவுத் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கும் நிதியுதவியை 3ஆயிரத்து 288 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

2010 ஆம் ஆண்டிற்கான செயற்றிட்டங்களுக்கு நிதியுதவி அதிகரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக உள் நாட்டில் இடம்பெயர்ந்து மீளக் குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கான உணவுத் தேவைகளை கருத்தில் கொண்டே இந்நிதியுதவி அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேச நிர்மாண அமைச்சு தெரிவித்தது. இதற்கமைய ஐ.நா. உலக உணவுத்திட்ட நிறுவனமானது ஏற்கனவே 2010 ஆம் ஆண்டுக்கென 134.45 மில்லியன் அமெரிக்க டொலரையே இலங்கைக்கென ஒதுக்கியிருந்தது. இடம்பெயர்ந்தோரின் உணவுத் தேவைகளைக் கருத்திற் கொண்டு பின்னர் இந் நிதி 163.50 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜோஷெல் ரைன் தெரிவித்துள்ளார்.

மேலும் ஐ.நா. வின் உலக உணவுத் திட்டத்தின் கீழ் கல்வி நடவடிக்கைகளின் போதான உணவு , தாய்-சேய் சுகாதார உணவுத் திட்டம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான உணவு, யுத்தப் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களில் வாழும் மக்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டே நிதியுதவிகளை வழங்கி வருகின்றது. (2-6)

# சோரன்பற்று பகுதியில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் பளை சோரன் பற்றுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை ஆயுதங்களை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர். இவற்றுள் பல்வேறு ரகத்தைச் சேர்ந்த 31 குண்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிகிறது.

இதைத் தவிர 6 கிளைமோர் குண்டுகள், 7 கிலோ கராம் எடை கொண்ட நிலக்கண்ணி வெடிகள், 6 கைக்குண்டுகள் உட்பட மேலும் 20 குண்டுகள், 82 டெட்டனேற்றர்கள் மற்றும் ரீ56 ரக தோட்டாக்கள் 400 என்பவையும் அடங்குகின்றன. தகவலொன்றுக்கு அமையவே பொலிஸார் இவற்றைக் கண்டு பிடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# முன்னாள் கடற்படை உயரதிகாரி சுவீடனில் அரசியல் தஞ்சம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்கிய முன்னாள் கடற்படை உயரதிகாரி ஒருவர் சுவீடனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த உயர் கடற்படை அதிகாரி சுவீடனில் இருந்து கொண்டு இலங்கையில் உள்ளவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து வந்தாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த கடற்படை உயரதிகாரி குமரன் பத்மநாதனுடனும் தொடர்புகளைப் பேணியிருந்தார் என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் இது தொடர்பான பல்வேறு ஆவணங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்

-ஜனாதிபதி தெரிவிப்பு-

(கொழும்பு)

கட்சி பேதமின்றி அனைவரும் நாட்டை அபிவிருத்தி செய்ய இணைந்து செயற்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கதிர்காமத்தில் தெரிவித்துள்ளார்.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தம்மை மக்கள் தெரிவு செய்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தை முடிவுறுத்தியதனைப் போன்றே நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் சில காலங்களில் மேம்படுத்துவ்தாக அவர் உறுதியளித்துள்ளார்.

வயிற்றுப்பிழைப்புக்காக சில வர்த்தகர்கள் எதிர்க்கட்சிக்கு வாக்களித்த போதிலும்கிராமப்புற மக்கள் அனைவரும் தமக்கு ஆதரவாக வாக்களித்ததாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் கட்சி அடிப்படையில் பிளவடைந்து நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது எனவும் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-6)

## பொதுத் தேர்தலுக்காக

# விக்கிரமபாகு-சிவாஜிலிங்கம் கூட்டணி அமைக்க திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம். சிவாஜிலிங்கம் மற்றும் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன ஆகியோர் கூட்டணி ஒன்றை அமைக்கத் தீர்மானித்துள்ளனர்.

குறித்த இருவரினாலும் அமைக்கப்படும் கூட்டணியின் மூலமாக நாடு தழுவிய ரீதியில் தேர்தலில் போட்டியிட திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும் இதனால் பாராளுமன்றத்தை கலைக்கக் கூடாது என உச்ச நீதிமன்றத்தை கலைக்கக் கூடாது எனவும் உச்ச நீதிமன்றில் தடையுத்தரவு கோரப்படவுள்ளதாகவும் முன்னர் தெரிவித்திருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட சந்தர்ப்பம் கிடைக்குமா என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என எம்.கே சிவாஜிலிங்கம் மற்றும் என். ஸ்ரீகாந்தா ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறெனினும் விக்ரமபாகுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடும் தீர்மானத்தில் மாற்றங்கள் எதுவுமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை மூடி மறைக்கும் நோக்கில் அரசாங்கம் பொதுத் தேர்தலை நடத்துவதாக எம்.ஜே.சிவாஜிலிங்கம் மற்றும் விக்ரமபாகு கருணாரட்ன ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். (2-6)

# சந்தர்ப்பவாதத்தை கைவிட்டு அரசாங்கத்துடன் இணைய வேண்டும்

## எதிர்க்கட்சிகளுக்கு ஹெலஉறுமய கோரிக்கை

(கொழும்பு)

சந்தர்ப்பவாத அரசியலைக் கைவிட்டு எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் வெற்றி பெற முடியும் என்ற சரத் பொன்சேகாவின் கணிப்பீட்டை மக்கள் தவிடுபொடியாக்கியுள்ளனர் என சுற்றாடல் அமைச்சர் பாதலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பொன்சேகா வடக்கு- கிழக்கு இரண்டு இலட்சம் மேலதிக வாக்குகளைப் பெற்றுக் கொண்டதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டு மில்லியன் மேலதிக வாக்குகளை தெற்கில் பெற்றுக்கொண்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிக் கொண்டிருக்கும் ஓர் தருணத்தில் ஆளும் கட்சிக்கு எதிராக பிரதேச மக்கள் வாக்களித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளதுடன் தமிழ் சிங்கள மக்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மதத்தலைவர்கள் கூடுதல் முனைப்பு காட்ட வேண்டுமென மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-6)



யாழ்.நகர் மேற்கு சமுர்த்தி வங்கிச்சங்கத்தின் பொங்கல் விழா ஜே/78 கிராம அலுவலர் பிரிவு,அத்தியடி ஸ்ரீ வீரகத்தி சிதம்பர விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது. அதில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பொங்கல் விழாவில் ஈடுபடுவதனையும் அருகில் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர் நிற்பதனையும் படத்தில் காணலாம்.

## பொதுத் தேர்தலில்

# ஜாதிக ஹெல உறுமய ஆளும் கட்சி இணைந்து போட்டியிட தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது ஜாதிக ஹெல உறுமய கட்சி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதித்தேர்தல் வெற்றி தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாட்டை விளக்கும் வகையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சில மாவட்டங்களில் ஜாதிக ஹெல உறுமய கட்சி போட்டியிடவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் சுற்றாடல் அமைச்சர் சம்பிக்க ரணவக்க போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ் சிங்கள மக்களுக்கு இடையிலான நீண்ட காலமாக காணப்படும் கலாசார இடைவெளியை குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

# டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் அனுசரனையுடன் கார்மேல் அன்னை ஆலய இளையோர் ஒன்றியம் நடத்தும் டெங்கு நோய் விழிப்புணர்வுச் செயற்திட்ட கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கார்மேல் மாதா ஆலய மண்டபத்தில் சுகாதார உயர் அதிகாரிகளால் நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் டெங்கு நோய் பற்றிய தகவல்கள், நோய்த்தாக்கம், அதற்குரிய சிகிச்சை முறைகள், நோயாளரின் பராமரிப்பு, அதனை தடுப்பதற்குரிய முயற்சிகள், ஒத்துழைப்பு, ஆலோசனைகள் என்பன பற்றி கலந்துரையாடப்படவுள்ளது.

அத்துடன் வீடுகள் பரிசோதிக்கப்பட்டு மருந்து விசுறுதல், புகை அடித்தல், விசேட வாகனத்தின் மூலம் கழிவுப்பொருட்களை அகற்றும் பணிகளும் மேற்கொள்ளப் படவுள்ளதாக இளையோர் ஒன்றியத்தலைவர் தெரிவித்துள்ளார். (2-4-39)

## கலை இலக்கிய பெருவிழா 2010இற்கான விண்ணப்பங்கள்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பிரதேசமட்ட கலை இலக்கிய பெரு விழா 2010 இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கட்டுரை, கவிதை, சிறு கதை, பாடலாக்கம் போன்ற போட்டிகள் நடாத் தப்படவுள்ளன. இதற்கான விண்ணப் பங்களையும் சுற்றுநிருபத்தினையும் கோப்பாய் பிரதேச செயலக கலாசாரப்பரிவில் பெற்று ஆக்கங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பதாக பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் சி.ஏ. மோகன் ராஸ் கேட்டுள்ளார். (4)

## மாணவர் பாவனைக்கான பொருட்கள் வழங்கல்

(சாவகச்சேரி)

நலன்புரி நிலையங்களில் இருந்து வந்து தென்மராட்சியிலுள்ள 56 பாடசாலைகளில் கல்விபயிலும் 3 ஆயிரம் மாணவர்களின் பாவனைக்காக யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் பிளாஸ்டிக் வாளிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன இன்று புதன்கிழமை அந்தந்த பாடசாலைகளில் விநியோகிக்கப் படவுள்ளதாக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (4-29)

## ஜேர்மனியிலும் பர்தாவுக்குத் தடை

முஸ்லிம் பெண்கள் தலை முதல் கால் வரை பர்தா அணிந்து முகத்தை மூடி மறைத்து கொண்டு பொது இடங்களில் நடமாடுவதற்கு பிரான்ஸ் நாட்டில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. பொது இடங்களில் பர்தா அணிவதை தடை செய்ய சட்டம் கொண்டுவர இருக்கிறது. இது போன்ற ஒரு சட்டத்தை ஜேர்மனியிலும் கொண்டு வரலாமா என்பது பற்றி அந்த நாட்டு அரசியல்வாதிகள் ஆலோசித்து வருகிறார்கள்.

பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளில் பர்தா அணிவதை தடை செய்ய வேண்டும். அதே போல பாதுகாப்பு மிகுந்த பகுதிகளான வங்கிகள், விமான நிலையங்கள் ஆகியவற்றிலும் இந்த ஆடையை அணிவதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று அரசியல் தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (2-6)

# இ.போ.ச.பஸ்கள் இன்மையால் மன்னாரில் போக்குவரத்து சீரின்மை

(கொழும்பு)

இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகளை முன்னிட்டு கண்டியில் இடம்பெறவுள்ள நிகழ்வுகளுக்காக இலங்கை அரச போக்குவரத்து சேவையின் மன்னார் சாலையில் கடமையில் ஈடுபட்டு வந்த 10 பஸ்கள் பொலிஸாரை ஏற்றிக் கொண்டு கண்டிக்கு சென்றுள்ளன.

இதன் காரணமாக மன்னார் சாலையில் இருந்து திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கான போக்குவரத்துக்கள் நேற்றைய தினம் பாதிப்படைந்திருந்தன.

இதன் காரணமாக பயணிகள் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (2-6)


## விஷேட பொதுக்கூட்டம்

தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் வன்னி பரந்தன் எனும் கழகத்தில் பதிவு செய்து உறுப்புரிமை பெற்றிருந்த ஊர்தி உரிமையாளர்களுடனான விஷேட கலந்துரையாடல் எதிர்வரும் 07. 02. 2010 ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு கிளிநொச்சி அரச அதிபர் பணிமனைக்கு முன்பாக உள்ள செயலகத்தில் நடைபெற உள்ளதால் மேற்படி உரிமையாளர்களும் நலன் விரும்பிகளும் இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்பாக வேண்டு கிறோம்.

*நிகழ்ச்சி நிரல்*

- இறை வணக்கம்
- புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவு
- தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் பதிவு செய்வது தொடர்பான தீர்மானம்
- வழி அனுமதி தொடர்பான தீர்மானம்
- பணிமனை அமைத்தல் தொடர்பான தீர்மானம்
- மற்றும் முக்கிய பிற விடயங்கள்.

நன்றி

இப்படிக்கு
தலைவர் த. ஜெகதீஸ்வரன்
தனியார் பேருந்து உரிமையாளர் கழகம்,
கிளிநொச்சி.

(562)



## மக்கள் வங்கி அறிவித்தல்

*தவறுக்கு வருந்துகிறோம்*

02.02.2010 நேற்று செவ்வாய்க்கிழமை பிரசுரிக்கப்பட்ட மேற்படி அறிவித்தலில் மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.12.2009 இற்கு முன்னர் அடகு வைத்து மீட்கப்படாத தங்க நகைகள், 31.12. 2009 என்பதற்கு பதிலாக 31.12.2008 என திருத்தம் செய்யுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/4374)


# சாவகச்சேரி கூட்டுறவு பணிமனையில் வெளிநாட்டு பணப்பரிமாற்றல் சேவையும் தொழில்நுட்பமையமும் ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தினால் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்று நிலையமும் கூட்டுறவு தகவல் தொழில்நுட்பமையமும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

கூட்டுறவு பணிமனையில் கீழ் தளத்தில் உள்ள சங்கத்தின் கிராமிய வங்கியில் வெஸ்ரன் யூனியன் வெளிநாட்டு பணப்பரிமாற்ற சேவையும் அதே கட்டத்தில் தகவல் தொழில்நுட்பமையமும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மேலும் இதனூடாக கணனி பயிற்சியை மேற்கொள்ளவிரும்பும் மாணவர்கள் பணிமனையில் விண்ணப்பப்படிவத்தினை பெற்று விண்ணப்பிக்குமாறும் பயிற்சி நெறியை பூரணமாக பயிலும் மாணவர்களுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும் எனவும் பொதுமக்களுக்கான கணனிசார் சேவைகளும் வழங்கப்படும் என்றும் சங்கத் தலைவர் இ. இராஜாராம் தெரிவித்துள்ளார். (4-29)

# மக்கள் அச்சமின்றி நடமாட வழி வகை செய்ய வேண்டும்

## வி.தங்கராஜா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு பத்திரிகையாளர்களுடனான மாநாடு நேற்று முன்தினம் காலை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது.

கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான வேட்பாளர் கலாநிதி வி.தங்கராஜா தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில் தொகுதி இணைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த கட்சியின் மாவட்ட பிரதான வேட்பாளர்,முதலில் தேர்தலில் ஜனாதிபதிக்கு வாக்களித்த குடாநாட்டு மக்களுக்கு கட்சி சார்பாக மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாவட்ட இணைப்பாளர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து மக்கள் சுதந்திரமாகவும் அச்சமின்றி நடமாட வழி வகை செய்யவேண்டும். இனி வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் எமது கட்சி 11 தேர்தல் தொகுதிகளையும் கிளிநொச்சியையும் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் கூறினார்.

தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்த்து வைக்க ஜனாதிபதி முன்னின்று செயற்படுவார் எனவும் குருநகரில் அமைக்கப்பட்ட எம்.ஜி.ஆர் சிலையில் தனது (அமைப்பாளர்) பெயரை விசமிகள் அளித்துள்ளதாகவும் இதற்கு மனித உரிமை மூலம் நீதிமன்றம் செல்லவுள்ளதாகவும் யாழ். மாவட்ட அமைப்பாளர் மேலும் தெரிவித்தார். (ச-30)

# இவ்வாரத்துள் மதியாமடுவில் மீள்குடியேற்றம் இடம்பெறும்

## வவுனியா அரச அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

மதியாமடு பிரதேசத்தில் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளதையடுத்து அப்பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்வதற்கான முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் இவ்வாரத்திற்குள் அப் பகுதியில் மீள்குடியேற்றம் இடம் பெறுமெனவும் வவுனியா அரச அதிபர் சார்ள்ஸ் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் கீழ் வவுனியா மதியாமடு பகுதி மக்கள் இவ் வாரத்தில் மீள் குடியேற்றப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதன்படி மதியாமடு பிரதேசத்தில் சுமார் 300 குடும்பங்கள் மீள் குடியேற்றப்படுவார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மீள்குடியேற்ற நடவடிக்கையின் கீழ் நேற்று ஆயிரம் பேர் பூநகரியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2-6)

# பாதுகாப்பு பிரிவினர்க்கு மனித உரிமை தொடர்பாக விளக்கமளிக்கும் திட்டம்

(கொழும்பு)

அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாக பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் திட்டமொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் முதல் கட்டமாக் பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவூட்டும் திட்டம் பொலிஸ் பிரிவுகள் ரீதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதென ஆணைக்குழுவின் சட்டப்பிரிவுச் செயலாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித் தார்.

இதற்கமைய இவ்வாண்டு மனித உரிமைகள் தொடர்பான அறிவூட்டல் மற்றும் பயிற்சிகளைப் பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்குவது தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சட்டம் நீதியை நடைமுறைப்படுத்தும் போதும் சமூகத்தில் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளும்போதும் அரசியல் யாப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள மக்களின் அடிப் படை உரிமைகள் மீறப்படாதவகையில் தமது கடமைகளை மேற்கொள்வது பற்றி அறிவூட்டல்கள் இதன் போது வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## மக்களை தவறாக வழிநடத்தும் விளம்பரங்களுக்குத் தடை

(கொழும்பு)

மக்களைத் தவறாக வழிநடத்தும் வகையிலான 26 உண்வுப் பொருட்கள் மற்றும் மருந்து வகைகள் தொடர்பான விளம்பரங்களுக்கு சுகாதார அமைச்சு தடை விதித்துள்ளது. உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு நடத்திய விசாரணைகளின் பின்னர் மேற்படி விளம்பரங்கள் தடை செய்யப்பட்டதாக சுகாதார போஷாக்கு அமைச்சு கூறியது.

பல்வேறு வகையான போஷாக்குகள் மற் றும் பயன்கள் உள்ளதாக விளம்பரம் செய் யப்படும் பல விளம்பரங்களில் அத்தகைய பயன் எதுவும் கிடையாது என கண்டறியப் பட்டுள்ளது. மக்களைத் தவறாக வழி நடத்தும் இத்தகைய 26 பொருட்கள் தொடர்பாக உணவு கட்டுப்பாட்டுப் பிரிவு ஆய்வு நடத் தியதன் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தொலைக்காட்சிகள் மற்றும் ஊடகங்களில் காண்பிக்கப்படும் விளம்பரங்கள் தொடர்பாகவும் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு ஆராய்ந்து வருகிறது. அவை தொடர்பாகவும் எதிர்வரும் நாட்களில் முடிவு எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2-6)

## வாக்கு எண்ணும் மையங்களில் வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளின் பிரதிகளை பகிரங்கப்படுத்துக

### கபே அமைப்பு

(கொழும்பு)

சட்ட நடைமுறையில் இருப்பது மாத்திரமல்லாது அது செயற்படுத்தப்படுகிறது என்பது வெளிப்படையாகப் புலப்பட வேண்டும் என்பதால் நாடு முழுவதும் வாக்கு எண்ணும் மையங்களில் வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளின் பிரதிகளைப் பகிரங்கப்படுத்துமாறு தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே அமைப்பு தேர்தல் ஆணையாளரிடம் கேட்டுள்ளது. இது குறித்து அந்த அமைப்பு தேர்தல் ஆணையாளருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

சுதந்திரமானதும் நீதியானதுமாக தேர்தல் நடத்தப்படுவது மாத்திரமல்லாது அவ்வாறான தேர்தல் நடத்தப்பட்டது என்பது வெளிப்படையாகத் தெரிய வேண்டும். ஏதோ ஒரு காரணத்தினால் ஜனாதிபதித் தேர்தலில் தொகுதி வாரியாக வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகள் தொடர்பாக மக்கள் மத்தியில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது என தாம் உணர்வதாக கபே அமைப்பு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

மேலும் வாக்கு எண்ணும் மையங்கள் ஊடாக வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளின் பிரதிகள் ஏற்கனவே அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதால் அது பகிரங்கமான ஆவணமாகும். இதனால் அதனை வெளியிடுவதில் எவருக்கும் பாதிப்பு ஏற்படப் போவதில்லை. இதனால் அனைத்து வாக்கு எண்ணும் மையங்களினால் வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளின் பிரதிகளை தமது அமைப்பிடம் வழங்க வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்வதாக கபே அமைப்பு அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

(2-6)

## கொடுப்பனவை பெற்றுக்கொள்ளவும்

செட்டிக்குளம் பிரதேச சபையினூடாக இடம்பெயர்ந்த நலன்புரி நிவாரணக் கிராமங்களில் சுகாதாரத் தொழிலாளர்களாகப் பணியாற்றிய நிலையில் தற்போது யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்வு செய்யப்பட்டவர்களில் ஒக்ரோபர் - நவம்பர் மாதங்களிற்குரிய சம்பளக் கொடுப்பனவினை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் எதிர்வரும்8ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் மாலை 2. 00 மணி வரை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணத்திற்கு தகுந்த ஆதாரங்களுடன் சமூகமளித்து சம்பளக் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளுமாறு வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

(2)

## இரவு நேர மீன்பிடி தொழிலுக்கு மன்னாரில் மீண்டும் தடை

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் இரவு நேர மீன்பிடிக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதி மீண்டும் கடந்த ஞாயிறு முதல் மறுக்கப்பட்டிருப்பதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் இரண்டு மாதங்களுக்கு மேலாக மன்னார் மாவட்டத்தின் தீவுப் பகுதிகளில் இரவு நேர மீன்பிடிப்புக்கான அனுமதியினை கடற்படையினர் வழங்கியிருந்தனர்.

இந்நிலையில் மீண்டும் கடற்றொழிலுக்கான அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையுமே கடலில் தொழில் செய்ய முடியும் எனவும் இதேவேளை பாஸ் நடைமுறையும் அமுல்படுத்தப்பட்டிருப்பதனால் தாமதத்தின் மத்தியிலே தற்போது தொழிலுக்குச் செல்ல வேண்டியிருப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் ஜனாதிபதித் தேர்தலின்போது இரவு நேர மீன்பிடித் தடை நீக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு மீனவர்கள் தொழிலுக்கு அனுமதிக்கப்பட்டனர். தற்போது தேர்தல் முடிவடைந்த நிலையில் மீண்டும் இரவு நேர மீன்பிடித்தடை அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(2-6)

## வடக்கு-கிழக்கு தேர்தல் வெற்றிக்கு த.தே.கூட்டமைப்பு உரிமைகோர முடியாது

### ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(கொழும்பு)



வடக்கு-கிழக்கில் ஜெனரல் சரத் பொன்சேகா ஈட்டிய வெற்றிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிமை கோர முடியாது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் முதல் பகுதியில் யுத்தம் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பில் மக்கள் இன்னமும் அதிருப்தியுடன் காணப்படுவதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளினால் கட்டுப்படுத்தப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் அவல நிலைமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காத்திரமான தீர்வுகளை வழங்கத் தவறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சுதந்திரமானதும் நியாயமானதுமான சூழ்நிலையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றியீட்டவில்லை என தெரிவித்துள்ளார். (2-6)

## வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் செயற்றிட்டங்களில் ஸ்தம்பிதநிலை ஏற்படாது

### அமைச்சர் டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டம் மற்றும் கிழக்கின் உதயம் செயற்றிட்டங்களில் எவ்விதமான ஸ்தம்பிதநிலையும் ஏற்படாது என போக்குவரத்து அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றி குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொண்ட வாக்குகளைவிட அதிகமான வாக்குகளை இம்முறைத் தேர்தலில் பெற்றுக் கொண்டுள்ளார். இது உண்மையில் நாங்கள் பெற்ற வெற்றியாகும். எதிர்க்கட்சியினர் வடக்கு-கிழக்கில் அரசாங்கத்துக்கு எதிராக பாரிய பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸதான் யுத்தத்தை செய்தார் என்றும் வடக்கு-கிழக்கிலும் ஜெனரல் சரத் பொன்சேகாதான் யுத்தத்தைச் செய்தார் என்றும் எதிரணி பிரசாரம் செய்து வந்ததையும் நாம் மறந்து விடக்கூடாது.

எவ்வாறெனினும் தமிழ் மக்களின் இதயங்களை வெல்வதற்கு ஆளும் கட்சி முயற்சிகளை மேற்கொள்ளும். இது தொடர்பில் எமது முக்கியமான கூட்டங்களில் ஆராயவுள்ளோம். இங்கு நாம் அவதானிக்க வேண்டிய முக்கிய விடயம் ஒன்று உள்ளது. அதாவது வடக்கு மக்கள் இம்முறை தேர்தலில் வாக்களித்துள்ளனர். இது நாம் அடைந்த பாரிய வெற்றியாகும்.

அம்மக்கள் யாருக்கு வாக்களித்துள்ளனர் என்பது ஒரு விடயமல்ல. மாறாக அம்மக்கள் ஜனநாயக மற்றும் சுதந்திரமாக வாக்களிப்பதற்கான சூழலை நாங்கள் உருவாக்கியுள்ளோம். நாங்கள் தற்போது பொதுத் தேர்தலுக்குத் தயாராகிவிட்டோம். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதைப் போன்று அமோக வெற்றியை பாராளுமன்றத் தேர்தலிலும் பெறுவோம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(2-6)

## தனியார்துறை ஊழியர்களுக்கான சம்பள உயர்வுத் திட்டம்

(கொழும்பு)

தனியார்துறை ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்குவுது தொடர்பாக சம்பள நிர்ணய சபைகளுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் அதன்படி தனியார்துறை ஊழியர்களுக்கு 2 ஆயிரம் ரூபா வரை சம்பள உயர்வு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் தொழில் திணைக்கள ஆணையாளர் ஜி.எம். பத்திரண தெரிவித்தார்.

இதன் மூலம் சுமார் 35 இலட்சம் ஊழியர்களுக்கு 15 சதவீதம் அல்லது அதனைவிடக் கூடுதலான சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ள 2500 ரூபா சம்பள உயர்வுடன் இணைந்ததாக தனியார்துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக 43 சம்பள நிர்ணய சபைகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த சம்பள உயர்வு வழங்கும் திட்டத்தின்படி தோட்ட ஊழியர்களுக்கு கடந்த 15ஆம் திகதி முதல் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது எனவும் இது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது தனியார்துறை ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளம் 5 ஆயிரத்து 750 ரூபாவாகும். ஆனால் பல தனியார்துறை ஊழியர்கள் இதனைவிட பல மடங்கு அதிக சம்பளம் பெறுவதாக கூறிய அவர் சம்பள நிர்ணய சபைகளுடனான பேச்சுவார்த்தைகளின் பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றார்.

தற்பொழுது சகல தனியார் ஊழியர்களுக்கும் 100 முதல் 300 வரையான வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

2009ஆம் ஆண்டில் தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. ஆனால் சம்பள நிர்யண சபைகளுடனான பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் துரிதமாக தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் தனியார்துறைக்குச் சம்பள உயர்வு வழங்கப்படுவதோடு அவர்களுக்கான ஊழியர் சேமலா நிதி, மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2-6)

## தலாய்லாமாவை ஒபாமா சந்திக்கக்கூடாது சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது

திபெத்திய மதத் தலைவர் தலாய்லாமா இம்மாதம் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருக்கிறார். இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக அவர் வோஷிங்டனிலும் ஓரிரு தினங்கள் தங்கவுள்ளார்.

அப்போது அவர் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவைச் சந்திக்கக்கூடும் என செய்தி வெளியாகியுள்ளது. இந்நிலையில் அமெரிக்கா செல்லும் தலாய்லாமாவை ஒபாமா சந்திக்கக்கூடாது என சீனா எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக பீஜிங்கில் செய்தியாளர்களிடம் பேசிய சீன அமைச்சர் ஜுஹு வெய்குன் தலாய்லாமாவை ஒபாமா சந்தித்தால் சீனா - அமெரிக்கா இடையிலான அரசியல் உறவு வெகுவாகப் பாதிக்கப்படும் என்று கூறினார்.

மேலும் இரு நாடுகளிடையேயான பரஸ்பர நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பும் பாதிப்புக்குள்ளாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(2-6)

# திபெத்தை விட்டுக்கொடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை

## தலாய்லாமாவின் பிரதிநிதிகளிடம் சீனா உறுதியளிப்பு

(பீஜிங்)

திபெத்துக்கான தன்னாட்சி குறித்து விட்டுக் கொடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று தலாய்லாமாவின் பிரதிநிதிகளிடம் சீனா உறுதியாக அறிவித்துள்ளது.

பீஜிங்கில் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரமுகர்கள்–அரசு அதிகாரிகள் மற்றும் தூதுவர்கள் கலந்து கொண்ட கூட்டம் நடந்தது. அதில் சீனாவின் தன்னாட்சிக்கு பாதகமான பிரச்சினைகளில் விட்டுக் கொடுத்தல் என்பது கிடையாது என்று கூறப்பட்டதாக ஜின்ஹுவா செய்தி ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் தலாய்லாமாவின் பிரதிநிதிகளாக லோடி கியாரி மற்றும் கெல்சாங் ஜியால்ஸ்டென் இருவரும் கலந்து கொண்டனர். திபெத்தின் தன்னாட்சி குறித்த தலாய்லாமாவின் கருத்துக்களை முன் வைத்த அவர்களிடம் சீனாவின் இம்முடிவு உறுதியாகக் கூறப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்கள் இருவரும் தர்ம ஸ்தலாவில் உள்ள தலாய்லாமாவைச் சந்தித்து சீனா கூறியதைத் தெரிவித்தனர். கடந்த 2002 இல் இருந்து சீனாவுக்கும் தலாய்லாமாவுக்கும் இடையில் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. தலாய்லாமா மற்றும் சீனா இடையிலான உயர் மட்டப் பேச்சுவார்த்தை, அவர் பெப்ரவரி 16இல் அமெரிக்காவுக்குச் சென்று வந்த பிறகு நடக்கக் கூடும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-6)




# சவுதிஅரேபியாவின் குற்றச்சாட்டுக்கு யேமன் கிளர்ச்சிக்காரர்கள் மறுப்பு

(லண்டன்)

சவுதி அரேபியா மீது தாக்குதல்கள் நடத்துவதை யேமனின் வடபகுதியில் இருக்கும் கிளர்ச்சிக்காரர்கள் நிறுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை அந்த ஷியா கிளர்ச்சிக்காரர்கள் மறுத்துள்ளனர்.

தாங்கள் போர் நிறுத்தம் செய்வதாக கடந்த வாரம் ஒரு தலைப்பட்சமாக அறிவித்திருந்தும் சவுதி அரேபிய விமானங்களும் எறிகணைகளும் தம்மீது இலக்குவைத்து தாக்குவதை நிறுத்தவில்லை என இக்கிளர்ச்சிக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும் தாங்கள் திருப்பிச்சுடவில்லை என அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

சவுதி அரேபியா மீது தாக்குவதை கிளர்ச்சிக்காரர்கள் நிறுத்தவில்லை என்பதுதான் அவர்கள் முன்வைத்த போர் நிறுத்தக் கோரிக்கையை தாங்கள் நிராகரித்ததன் முக்கிய காரணம் என யேமன் அரசாங்கம் நேற்று முன்தினம் கூறியிருந்தது. (6)

### இங்கிலாந்தில்

# புகைபிடிப்பவர்களின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைக்கத் திட்டம்

(லண்டன்)

இங்கிலாந்தில் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் புகைபிடிப்பவர்களின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைப்பதற்கு அந்தநாட்டு அரசு திட்மிட்டுள்ளது. இதற்காக சிகரெட் விற்பனை செய்யும் இயந்திரங்களைத் தடை செய்யவும் அது ஆலோசித்து வருகிறது.

இங்கிலாந்தில் மொத்த மக்கள் தொகையில் 21 சதவீதம் பேர் புகைப்பிடிக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கையை 10 சதவீதமாகக் குறைக்கச் சுகாதார அமைச்சரகம் திட்டமிட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக புகைபிடிப்பவர்கள் எண்ணிக்கை 25 சதவீதமாகக் குறைந்தது. கடந்த ஆண்டு மட்டும் 3 இலட்சத்து 37 ஆயிரம் பேர் புகைபிடிப்பதைக் கைவிட்டனர். 2007ஆம் ஆண்டு பொது இடங்களில் புகைபிடிக்க அந்த நாட்டு அரசு தடை விதித்தது. (6)

# அமெ. வரவு–செலவுத் திட்டம் 3.83 இலட்சம் கோடி டொலர்

## துண்டுவிழும் தொகை 1.56 இலட்சம் கோடி டொலர்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா 3.83 இலட்சம் கோடி டொலருக்கான இவ்வருட வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அதில் துண்டுவிழும் தொகை 1.56 இலட்சம் கோடி என அறிவிக்கப் பட்டுள்ளது.

அமெரிக்க வரலாற்றில் அதிகபட்ச துண்டுவிழும் தொகை இதுவாகும். கடந்த ஆண்டு இந்த பற்றாக்குறை 1.41 இலட்சம் கோடி டொலராக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய பொருளாதார தேக்க நிலையால் நிலவிவரும் வேலை வாய்ப்பின்மைக்கு முற்றுப்புள்ளி வைக்க அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்க அதிக நிதி ஒதுக்கவும் என்றும் நிதி வருவாயை அதிகரிக்க பெரிய நிறுவனங்களுக்கும் 2.5 இலட்சம் டொலர் வருவாய் ஈட்டும் குடும்பங்களுக்கும் வரி விதிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

எண்ணெய், எரிவாயு, நிலக்கரி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மானியத்தை இரத்து செய்யவும் முடிவெடுக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (2-6)

### காசா தாக்குதலில் எரிசாயன குண்டுகள்

# இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை

மத்திய கிழக்கின் காசாவில் கடந்த வருடம் இஸ்ரேல் மேற்கொண்ட இராணுவத் தாக்குதலின்போது வெள்ளை பொஸ்பரஸ் எரிரசாயன குண்டுகள் விழுந்து அங்குள்ள ஐ.நா. கிடங்கொன்று தீக்கிரையாகிய சம்பவம் தொடர்பில் தமது இராணுவத்தின் இரண்டு மூத்த அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

யுத்த விதிமுறைகளை மீறும் விதமாக பொதுமக்கள் அடர்த்தியாக வாழும் ஒரு பகுதியில் ஆட்டிலறி ஷெல் குண்டுகளைப் பயன்படுத்தி பொதுமக்களின் உயிருக்குப் பங்கம் விளைவித்ததன் பேரில் இந்த இராணுவ அதிகாரிகள் கண்டிக்கப்பட்டுள்ளனர்.

காசாவில் போர்க் குற்றங்கள் நடந்ததாகத் தெரிவிக்கப்படுவது குறித்து இஸ்ரேல், பாலஸ்தீனம் என்று இரு தரப்புமே விசாரணை செய்ய வேண்டும் என்று ஐ.நா. கோரியிருந்த நிலையில் ஐ.நாவுக்கு இஸ்ரேல் வழங்கிய ஒரு அறிக்கையில் அந்நாடு இந்த விடயத்தை ஒப்புக் கொண்டுள்ளது.

காசா தாக்குதலின்போது நடந்த முப்பத்து ஆறு சம்பவங்கள் தொடர்பில் குற்றவியல் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாக இஸ்ரேலிய அரசு பிரதிநிதி தெரிவித்துள்ளார். (6-4)

# பக்தாத்தில் தற்கொலைத் தாக்குதல்; நாற்பதிற்கும் அதிகமானோர் பலி

(பக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் ஒரு பெண் தற்கொலைக் குண்டுதாரி நடத்திய குண்டுத் தாக்குதலில் நாற்பதுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலில் சுமார் நூறு பேர் வரை காயமடைந்துள்ளதாக ஈராக்கிய பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பெண் தற்கொலைக் குண்டுதாரி தனது உடலில் மேற்பகுதியில் உடுத்தியிருந்த உள்ளாடையில் குண்டுகள் திணித்து வைத்திருந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் பலியானவர்கள் மற்றும் காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஷியா முஸ்லிம்கள். அவர்கள் ஈராக்கின் தலைநகருக்கு தெற்கே இருக்கும் கர்பலா நகரில் துக்கத்தை அனுஷ்டிக்கும் ஒரு மத நிகழ்வில் கலந்து கொள்ளப் புனிதப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

கடந்த சில வருடங்களாகவே ஈராக்கில் சுனி முஸ்லிம் தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் புனித யாத்திரை மேற்கொள்ளும் ஷியா இன மக்களைக் குறிவைத்து தாக்குதலை நடத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)




சோவியத் யூனியன் ஆட்சியின் போது ஆப்கானிஸ்தானின் காந்தஹார் மலைப் பகுதியில் விழுந்து கிடந்த ரஷ்ய போர் விமானம். இந்தப் பகுதியில் கண்ணிவெடிகள் இருப்பதால் இன்னும் சிதைந்த பாகங்கள் அகற்றப்படாமல் உள்ளது.

# வட–தென்கொரிய தலைவர்கள் இரகசியப் பேச்சு நடத்தியுள்ளனர்

## தென்கொரிய பத்திரிகை தகவல்

(சியோல்)

வடகொரியா மற்றும் தென்கொரியா ஆகிய இரு நாடுகளின் தலைவர்களும் கடந்த ஆண்டு இரகசியமாகச் சந்தித்து ஆலோசனை நடத்தியதாக தென்கொரிய பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு வடகொரியாவில் உள்ள கேசாங் நகரில் கடந்த ஆண்டு நவம்பர் 7, 14 ஆகிய இரு தினங்கள் நடைபெற்றது. இதில் இரு நாட்டுத் தலைவர்களும் உச்சி மாநாடு நடத்துவது குறித்து விவாதித்தனர். ஆனால் இந்தக் கூட்டத்தில் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை. கூட்டம் தோல்வியைத் தழுவியது என்றும் அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இரு நாடுகளிடையே நீண்ட காலமாக நிலவும் கருத்துவேறுபாட்டை களைய வேண்டும். வடகொரியாவுடன் சுமுகமான உறவை ஏற்படுத்த வேண்டும் என்பதில் தென்கொரியா ஆர்வமாக உள்ளது. இதற்கான முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

உச்சி மாநாடு நடத்துவது தொடர்பாக சமீபத்தில்கூட வடகொரியத் தலைவருக்கு கடிதம் எழுதி பதிலுக்காகக் காத்திருக்கிறது என்றும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

சமீபத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த தென்கொரிய அதிபர் லீ மியூங் பாக் வடகொரியாவுடன் பேச்சு நடத்த தாங்கள் தயாராகவுள்ளதாகத் தெரிவித்தார். ஆனால் வடகொரியா இதற்கு எவ்வித பதிலும் தெரிவிக்காமல் தொடர்ந்தும் மௌனம் காத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

# சூரியனில் ஆய்வு நடத்த நாசா திட்டம்

(வோஷிங்டன்)

சூரியனில் ஆய்வு நடத்த அமெரிக்காவின் நாசா நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் சூரிய மண்டலத்தில் நிகழும் அதிசயங்கள், இதன் மூலம் பூமியில் ஏற்படும் குழப்பங்களுக்கும் தீர்வுகாண முடியும். இதற்காக எதிர்வரும் 9ஆம் திகதி முதல் விண்வெளியில் காப்ளக்ஸ்–41 என்ற ஆய்வகத்தை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இங்கிருந்து 5 ஆண்டுகள் ஆய்வு நடத்தவும் திட்டமிட்டுள்ளது. (6)

# பாடசாலை அனுமதி கிடைக்காவிடின் மேன்முறையீடு செய்யவும்

## கல்வி அமைச்சு அறிவுறுத்தல்

(கொழும்பு)

முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்ப்பதற்கு பாடசாலை அனுமதி கிடைக்காவிட்டால் அது குறித்து பெற்றோர்கள் வலயக் கல்விப் பணிமனைகளுக்கு மேன்முறையீடு செய்யுமாறு கல்வி அமைச்சு அறிவுறுத்தி உள்ளது.

2010 ஆம் ஆண்டிற்காக தேசிய பாடசாலைகளுக்கு மாணவர்கள் சேர்க்கும் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும். முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்க்கும் நிகழ்வு கடந்த ஜனவரி மாதம் 28ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடைபெற்றதாகவும் தேசிய பாட சாலைப் பிரிவு தெரிவித்துள்ளது.

(2-6)

# கல்வித்துறை மேம்பாடுகளுக்காக சிறப்பான வழிமுறைகள் கையாளப்படும்

## பரீட்சை ஆணையாளர்

(கொழும்பு)

கல்வித்துறை மேம்பாட்டுக்காக மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு என்ற கொள்கை பிரகடனத்தின் மீது இலங்கை பரீட்சைத் திணைக்களம் தமது கவனத்தை செலுத்தியுள்ளது.

மாணவர்களின் திறமைகளை நாட்டின் அபிவிருத்திக்காக சிறப்பான முறையில் கையாளும் முறைமையை கடைப்பிடிக்க முதலிடம் வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் இது தொடர்பான கருத்துக்கள் மேற்கொள்ளப்படும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் 48 சதவீதமான மாணவர்கள் உயர்தரக்கல்வியை மேற்கொள்வதற்கான தகுதியை பெற தவறி விடுகிறார்கள். இதில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் பல்கலைக் கழக கல்வியை தொடர்வதற்கான தகுதியை பெறு கின்றனர்.

இதில் பல்கலைக்கழகங்களுக்கு 20 ஆயிரம் பேர் மாத்திரமே உள்வாங்கப் படுகின்றார்கள். ஏனையவர்களின் திறமைகளை நாட்டின் எதிர்கால பயணத்திற்காக பயன்படுத்த முடியுமான புதிய வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது என்றார்.

(2-4)

# இலங்கையின் ஈரநிலங்களும் அவற்றின் முக்கியத்துவமும்

(நேற்றைய தொடர்ச்சி)

*4. நீரியற் செல்வாக்கு*

ஈரநிலங்களின் பிரதான செயற்பாடு நீரின் தரத்தினைப் பேணுதலாகும். ஈரநிலங்களானது மேற்பரப்பு மற்றும் தரைக்கீழ் நீரிலிருந்து மாசுபடுத்தும் கனியங்கள், அடையல்களை நீக்கி ஒரு உயிர் வாழும் வடிகட்டியாகத் தொழிற்படுகின்றது. பொஸ்பரஸ், நைதரசன் போன்ற கனிமங்கள் அளவுக்கதிகமாக படியவிடப்படும் போது நீர்ச் சூழற்தொகுதி பாதிக்கப்படுகின்றது.

இத்தகைய கனிமங்களை ஈரநிலங்கள் தாவர வாழ்க்கை மூலம் பெறல் (update by plant life), அடையல்களுக்குள் மிதத்தல் (adsorption into sediments), சேதனப் பொருட்களைப் படியவிடல் (Deposition of detrius-organic materials) மற்றும் இரசாயன படிவு வீழ்ச்சி (chemical pre cipitaytion) முறைகள் மூலம் வெளியேற்றுகின்றன. இவற்றுள் தாவரங்கள் மூலம் பிரித்தெடுத்தலே முக்கியம் பெறுகின்றது.

ஈரநிலங்கள் நீரியல் வட்டச் செயற்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதாவது மேற்பரப்பு நீரோட்டத்தின் வேகத்தை குறைப்பதுடன், நீரைத் தேக்கியும் வைத்திருக்கக் கூடியது. இதனால் ஊடுவடிதல் செயற்பாடு தொடர்ந்து நிகழ்வதால் தரைக்கீழ் நீரைச் சேமிக்க உதவுகின்றன.

இவ்வாறு தரைக்கீழ் நீர்வளத்தைப் பேணுதல், நீர் நிலைகளை வளமாக்குதல், வளிமண்டலத்திற்கு நீராவியை வழங்குதல், வளிமண்டல ஈரப்பதனைப் பேணுதல் மற்றும் நீரியல் வட்டச் செயற்பாட்டிற்கும் உதவுகின்றன.

**பொருளாதாரம்**

ஈரநிலங்கள். விவசாயம், மீன்பிடி, நீர்மின் சக்தி, எரிபொருள், நீர்வசதி, மூலப்பொருள், சுற்றுலா, வேலைவாய்ப்பு போன்ற பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன.

*1. விவசாயம்*

மனிதனால் உருவாக்கப்பட்ட ஈரநிலங்களில் குளங்கள் விவசாயத்திற்கு வேண்டிய நீரை வழங்குகின்றன. இலங்கையில் வரண்ட மற்றும் இடைவலயங்களில் மழை மூலம் கிடைக்கின்ற நீரைச் சேமித்து விவசாயத்துக்கு தேவையான நீரை வழங்குவதில் குளங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மேலும் உவர்த்தன்மை மற்றும் சேற்றுத் தன்மையால் பயன்படுத்தப்படாதுள்ள ஈரநிலப் பிரதேசங்களை பதப்படுத்தல் மூலம் விவசாய நிலங்களாகவும் பயன்படுத்தலாம்.

*2. விறகுத்தேவை*

கரையோரப்பகுதி வாழ்மக்களின் எரிபொருள் தேவையில் ஈரநிலங்களில் இருந்து கிடைக்கின்ற விறகு முக்கியம் பெறுகின்றது. இவற்றில் கண்டல், பெருங்கண்டல் போன்ற தாவரங்களே கூடுதலாகப் பயன்படுகின்றன. மேலும் ஈரநிலங்களிலிருந்து கிடைக்கின்ற மற்றொரு எரிபொருள் முற்றா நிலக்கரியாகும்.

*3. மீன்பிடி*

மக்களின் உணவுத் தேவையில் மீன்களை வழங்குவதில் ஈரநிலங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ்வகையில் இலங்கையின் மொத்த மீன்பிடியில் 15% மானவை மனிதனால் உருவாக்கப்பட்ட ஈரநிலங்களில் இருந்து பெறப்படுகின்றது. இதன் மூலம் கிராமிய சமுதாயத்தினர் உணவையும், வருமானத்தையும் பெறுகின்றனர்.

*4. போக்குவரத்தும் சுற்றுலாவும்*

நகரங்களை அண்டிக் காணப்படுகின்ற ஈரநிலங்கள் போக்குவரத்து ஊடகமாகக் காணப்படுகின்றன. ஈரநிலங்கள் எழில் மிகுந்தனவாகவும், சுற்றுலாப் பயணிகளைக் கவருவனவாகவும் காணப்படுகின்றன.

இலங்கையில் ஹிக்கடுவ, பெந்தோட்ட, நிலாவெளி போன்ற கரையோர பிரதேசங்களில் கண்ணாடி நாரிலான படகுகளில் சென்று கடலுக்கடியில் உள்ளவற்றை காண்கின்றார்கள். அத்துடன் ஈரநிலங்களின் மூலம் அந்தியச் செலாவணியும் கிடைக்கின்றது.

*5. மூலப்பொருள்*

கைத்தொழில் நடவடிக்கைகளுக்குத் தேவையான மூலப்பொருள் மற்றும் நீர்வசதி கிடைக்கும் இடங்களாக ஈரநிலங்கள் காணப்படுகின்றன. நீர்மேவு சமவெளிகளில் அடையல்கள் ஒன்று சேர்வதால் அப்பிரதேசங்களில் களிவகைகள் அதிகளவில் தேங்கிக் காணப்படும்.

இவை ஓட்டுக் கைத்தொழில், செங்கற் கைத்தொழில்களுக்கு மூலப்பொருளாகப் பயன்படுகின்றன. தொழிற்சாலைகள் பெரும்பாலும் நீர்வசதி கிடைக்கும் இடங்களில் அமைவுபெறுகின்றன. இவ்வகையில் இலங்கையில் காணப்படுகின்ற பாரிய தொழிற்சாலைகளான ரயர், உருக்கு, தோல், ஒட்டுப்பலகை, றுகுண சீமெந்துக் கூட்டுத்தாபனம் போன்றன ஆறுகளின் மூலம் நீர் கிடைக்கும் மேற்பரப்பு நீர் நிலைகளை அண்டி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கன. அதேபோன்று சுண்ணாம்பு உற்பத்திக்கு முருகைக்கல் பயன்படுகின்றது.

*6. நீர் வழங்கல்*

ஈரநிலங்களில் இருந்து பெறப்படுகின்ற நீர் சுத்திகரிப்பின் பின் குழாய்கள் மூலம் மக்கள் பாவனைக்கு வழங்கப்படுகின்றது.

இலங்கையில் தற்போது லபுகம களட்டுவெவ, அம்பாந்தோட்டை, குருநாகல், அனுராதபுரம், மாத்தறை, மன்னார், கல்முனை போன்ற இடங்களிலுள்ள பெரிய நீர் வழங்கல் செயற்றிட்டங்கள் உள்நாட்டு மேற்பரப்பு நீர்நிலங்களில் தங்கியுள்ளன.

*7. வேலைவாய்ப்பு*

ஈரநிலங்கள் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ வேலைவாய்ப்பை வழங்குவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

மீன்பிடிக் கைத்தொழில், நெற்செய்கை போன்றவை ஈரநிலங்கள் சார்ந்த சில தொழில்களாகும். மேலும் அழகு சாதனப் பொருட்களை தயாரிப்பதற்குரிய மூலப் பொருட்கள் கிடைக்கும் இடங்களாகவும் , உல்லாசப் பிரயாணிகளுக்கான பயணச் சேவை, வழி காட்டுதல் போன்றவகையிலும் வேலைவாய்ப்புக் கிடைக்கின்றது.

**சமூகம்**

ஈரநிலங்கள் சமூக, கலாசார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தன. இவை உள்ளூருக்குரிய சமயம் மற்றும் வரலாற்று ரீதியான முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. அதாவது பூர்வீகக் குடிகளின் கொண்டாட்டங்கள், வேட்டையாடல் உணவு சேகரித்தல் போன்ற செயற்பாடுகளுடன் ஈரநிலங்கள் தொடர்புபட்டுள்ளன.

மேலும் ஆறுகள், வெள்ளச்சமவெளிகள் போன்றவை வரலாற்று நாகரிகங்களின் ஆரம்பப் பருவமாகக் காணப்படுகின்றன. மனிதனால் உருவாக்கப்பட்ட ஈரநிலங்களான வரலாற்றுக் குளங்கள், வயல் நிலங்கள் போன்றன ஈரநிலங்களுக்கும் உயர் கலாசார சொத்துடமைக்கும் இடையிலான இடைத்தொடர்பினை எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கையில் 2500 வருடங்களுக்கு முன் இந்து- ஆரியக் குடியிருப்புக்கள் உணவு உற்பத்தியை ஆரம்பித்ததாகவும், இக்காலப் பகுதியில் விஸ்தரிக்கப்பட்ட நீர்ப்பாசன முறைகள் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. கி.மு. 420 ஆம் ஆண்டளவில் இலங்கையில் உணவுக்காக நீர்ப்பாசனக் குளங்கள் அமைக்கப்பட்டதாக ஆதாரங்கள் கூறுகின்றன.

**ஈரநிலங்களின் அச்சுறுத்தல்**

ஈரநிலங்கள் மனித நடவடிக்கைகளினாலும், சூழற் செல்வாக்கினாலும் அச்சுறுத்தலுக்குள்ளாகின்றன. மனித செயற்பாடுகள் எனும் போது கட்டுமானங்கள், நிலமீட்பு, கழிவகற்றல், வெளிநாடுகளுக்குரிய தாவர இனங்களின் உள்வருகை, ஈரநிலங்களை அகழ்தல் மற்றும் அகற்றுதல் போன்ற நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம். அதேபோன்று வரட்சி நிகழ்வு, சூறாவளி, புயல், அரிப்பு போன்ற சூழற்காரணிகளாலும் ஈரநிலங்கள் குறைவடைகின்றன.

இலங்கையின் ஈரநிலங்கள் கூடுதலாக சதுப்புநிலமீட்பு, காடழிப்பு, சூழல் மாசடைதல், ஈரநில வளங்கள் சுரண்டப்படல் போன்ற காரணிகளால் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன.

அதிகரித்து வரும் நிலத் தேவையை ஈடு செய்வதற்கான ஒரு வழியாக ஈரநில மீட்பு இடம் பெறுகின்றது. ஈரநில மீட்பினால் கிடைக்கின்ற நன்மைகளை விட அதனால் ஏற்படும் தீங்குகள் அதிகமாகவுள்ளன. ஈரநில மீட்பினால் அடைமழை நாட்களில் நகர வீதிகளில் நீர் நிரம்பி வழிவதுடன் வெள்ளப்பெருக்கினாலும் சேதம் விளைவதுண்டு.

பயிர்ச்செய்கை, குடியேற்றங்கள் அமைத்தல் போன்றவற்றுக்காக காடுகள் அழிக்கப்படுகின்றன. குறிப்பாக ஈரநிலங்களை அண்டிய மலைச் சரிவுகளில் காடுகள் அழிக்கப்படுவதால் வளமான மண்படை கழுவிச் செல்லப்பட்டு நீர்த்தேக்கங்களில் படியவிடப்படுவதால் வெள்ளப்பெருக்கு அபாயம் அதிகரிக்கும். அத்துடன் நீர்நிலைகள் படிப்படியாகத் தூர்ந்து போகக்கூடும். இதனால் நீர்மினி உற்பத்தியும் பாதிக்கப்படும்.

ஈரநிலங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் சூழல் மாசடைதலும் ஒன்றாகும்.

மேலும் மனித செயற்பாடுகளினாலும் ஈரநில வளங்கள் சுரண்டப்படுகின்றன. அதாவது அலங்கார மீனினங்கள், கண்டல் தாவரங்கள், ஈரநிலக் கனிய வகைகள் போன்றவை இவ்வாறாகச் சுரண்டப்படும் சில ஈரநில வளங்களாகும்.

**ஈரநிலங்களைப் பாதுகாத்தல்**

அண்மைக்காலம் வரை ஈரநிலப் பாதுகாப்பு என்பது பாதுகாக்கப்பட வேண்டிய இடங்களை விஸ்தரிப்பதுடன் மட்டும் இருந்தது. 1989இல் Scott (ஸ்கொட்), Poole (பூள்) என்பவர்கள் ஆசியாவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் ஈரநிலங்களின் அளவுகள் பற்றியும் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களையும் நிரற்படுத்தினார்கள்.

அச்சுறுத்தல் பற்றிய ஆய்வுகளின்படி அடிக்கடி ஒரே மாதிரியாக ஏற்படும் அச்சுறுத்தல்கள் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கட்டுப்படாத வெளிப்பிரச்சனைகளால் ஏற்படுகின்றனது. சட்டவிரோத குடியிருப்புக்கள், அதிகமாக வேட்டையாடுதல், அதிக மேய்ச்சல், வெட்டுமரம் வெட்டுதல் என்பன கொள்கையளவில் பாதுகாக்கப்படவேண்டிய பிரதேசத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும். நீர்ப்பிரி நிலங்களில் மண்ணரிப்பால் வரும் உவராக்கம், நகர மற்றும் கைத்தொழில் வலயங்களில் இருந்து வரும் மாசாக்கம், களைநாசினிகள், உரப்பாவனை மூலமான இரசாயனமாதல், நீர் வழங்கலில் ஏற்படும் இடர்பாடுகள் என்பன அதிகார சபையின் அதிகார எல்லைக்கு அப்பால் இருந்து வரும் அச்சுறுத்தல்களாகும். ஆசியாவில் 69 பாதுகாக்கப்பட்ட ஈரநிலங்கள் உள்ளன. இவை உயிர் அச்சுறுத்தலில் உள்ளன. இவற்றில் 20 இடங்களில் அடிப்படைப் பிரச்சனைகள் வெளிவாரியாகவே ஏற்படுகின்றன.

ஈரநிலங்களின் பாதுகாப்பில் றம்சார் பிரகடனம் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெற்று வருகின்றது. இது பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

1. ஈரநிலங்களை சர்வதேச முக்கியத்து வத்தின் அடிப்படையில் றம்சார் நிலமாக தெரிவு செய்து அவற்றின் முக்கியத்து வத்தை அதிகார சபைகளுக்கு உணர்த் துதல்
2. பட்டியலிடப்பட்ட இடங்களை முன்னேற்றுவதற்காக திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல்.
3. ஈரநிலங்களை புத்திசாலித்தனமாக உபயோகிப்பதற்கு திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல்.
4. தேசிய ரீதியில் ஈரநிலங்களை கண்டறிதல்.
5. ஈரநிலங்களின் மாற்றத்தினையும் சூழல் தாக்க மதிப்பீடுகளையும் மேற்கொள் ளல்.
6. ஈரநிலங்களில் இயற்கை ஒதுக்குகளை விஸ்தரித்து அவற்றுக்குப் போதிய கண்காணிப்பு வழங்குதல்.
7. ஈரநிலங்களை முகாமை செய்ய, பாது காக்க, கண்காணிக்க ஆளணியினருக்கு பயிற்சி வழங்குதல்.

**சிவகௌரி பிரதாபன்**

ஈரநிலங்கள் பற்றிய தகவல்கள் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் அதிகரிக்கப்படல் வேண்டும். ஈரநிலங்களின் முக்கியத்துவத்தினை மக்களுக்கு உணர்த்துவதுடன் அரசாங்கமும் இவற்றை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(முற்றும்)

# தேர்தலில் தோல்வியுற்றிருந்தால் நாங்கள் சடலமாகியிருப்போம்!

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு



(கொழும்பு)

நடைபெற்று முடிந்தது ஜனாதிபதித் தேர்தல் மட்டுமல்ல எமது உயிர்ப்பிரச்சினை, எமது உயிருக்கான விளையாட்டு. நாம் தோல்வியுற்றிருந்தால் தற்போது நீங்கள் எங்களைச் சடலமாகத் தான் பார்த்திருக்க முடியும் என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது, தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் கடந்த 27ஆம் திகதி புதன்கிழமை உயர் அதிகாரிகளும், அரசியல் தலைவர்களும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வாழ்த்த அலரிமாளி கைக்குச் சென்றனர்.

ஆனால் சிலர் சென்ற திசை வேறு, தொலைத் தொடர்பு திணைக்களத்தின் கட்டுப்பாட்டு ஆணைக்குழு, சியதா மீடியா நெற்வேர்க் ஆகியவற்றின் தலைவர்கள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய, விமல் வீரவன்ச, குமனசிறி ஹெட்கே ஆகியோரைப் பார்க்கச் சென்றனர்.

அவர்களை கண்ட கோத்தபாய மிகவும் ஆவேசமாகக் கத்தினார். ஏன் நீங்கள் இங்கு வந்தீர்கள்? பொன்சேகாவுக்காக வேலை செய்வதற்கு அவர் உங்களுக்குப் பணம் தந்திருந்தார் அல்லவா?

அவரிடமே செல்லுங்கள். அது ஜனாதிபதிக்கான தேர்தல் மட்டுமல்ல எமது உயிர்ப் பிரச்சினை. எமது உயிருடனான விளையாட்டு. நாம் தோல்வியுற்றிருந்தால் தற்போது நீங்கள் எங்களைச் சடலமாகத் தான் பார்த்திருக்க முடியும்.

இவ்வாறான மனிதனின் வெற்றிக்காக நீங்கள் உழைத்தீர்கள். இனிமேல் சமாதானம் தேடி இங்கு வரவேண்டாம் என கோத்தபாய கூறியதாக அந்த கொழும்பு ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-5)

## அமைச்சர் ஹேமகுமார அரசியலிலிருந்து ஓய்வு

விவசாய அமைச்சர் ஹேமகுமார நாணயக்கார அரசியலிலிருந்து ஓய்வு பெறத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமது உடல் நிலையைக் கருத்திற் கொண்டு தாம் செயற்பாட்டு அரசியலிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் ஹேமகுமார நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தாம் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# வவுனியாவில் இடம்பெயர்ந்துள்ள மாணவருக்கு திங்கள் முதல் காலை நேர வகுப்பு

## வவுனியா மாவட்ட தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்

இடம்பெயர்ந்து வவுனியா நகர்ப்புறப் பாடசாலைகளில் இணைக்கப்பட்டு மாலை நேர வகுப்புக்கள் நடத்தப்பட்ட மாணவர்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் காலை நேர வகுப்புக்கீள் நடத்தப்படவுள்ளன. இது தொடர்பாக வவுனியா மாவட்ட தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் வி. ஆர்.ஏ. ஒஸ்வேள்ட் தெரிவிக்கையில்;

இடம்பெயர்ந்து வந்த மாணவர்கள் நிவாரணக் கிராமங்களில் வசித்த பொழுது முகாம்களில் அவர்களுக்குக் கல்வி வழங்கப்பட்டது. அவர்கள் வவுனியா நகரத்திலே வந்து தங்கியிருந்த பொழுது நகரப் புறத்திலே உள்ள பாடசாலைகளிலே மாலை நேர வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. டெங்கு காரணமாக காலை 8.30 மணிக்கு ஆரம்பித்த பாடசாலைகள் மாலை நேரம் முடிவடைந்த பின்பு இந்த மாணவர்களுக்கு கல்வி வழங்குவதிலே பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினோம். இதன் காரணமாக இந்த மாணவர்களுக்கு காலை நேரப் பாடசாலைகளை நடாத்துவதற்காக காமினி மகாவித்தியாலயத்திலுள்ள வகுப்பறைகளைப் பயன்படுத்தி வகுப்புக்களை நடாத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம்.

அதேவேளை நிவாரணக் கிராமங்களிலே இருந்த மாணவர்களுக்கு தேவையான கல்வி வழங்குவதற்கு போதியளவு ஆசிரியர்களும் இருக்கவில்லை.

ஆகவே நிவாரணக் கிராமங்களுக்கு ஆசிரியர்களை அனுப்பும் நோக்குத்துடனும் இந்த மாணவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்கும் நோக்கத்துடனும் காமினி மாக வித்தியாலயத்திலே பாடசாலை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டபோதிலும் பல்வேறு காரணங்களாலே இந்த வகுப்பறைகளில் நேற்று முன்தினம் கல்வி கற்பிக்க முடியவில்லை. எதிர்வரும் திங்கட்கிழமை இங்கே கல்வி வழங்கப்படும். இந்த நகர்ப்புறப் பாடசாலைகளிலே காலை நேரத்திலே அனுமதி எடுக்க முடியாத மாணவர்கள் நகரப் புறப் பாடசாலைக்கு அயலிலுள்ள கிராமப் புறப் பாடசாலைகளிலே அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்கமைய 1500 பிள்ளைகளுக்கு காமினி மகாவித்தியாலயத்தில் நாங்கள் வகுப்புக்களை நடத்துவதற்கு உத்தேசித்திருக்கின்றோம். ஏனைய மாணவர்கள் கிராமப் புறப் பாடசாலைகளிலே மாலை நேர வகுப்புக்களிலே அனுமதிக்கப்படுவர். பாடசாலைகளில் அனுமதி கிடைக்காவிட்டால் அதற்குரிய நடவடிக்கையை நான் எடுப்பேன். மேலும் உயர்தர வகுப்பிலே கற்கும் மாணவர்களுக்குரிய கல்வியை வவுனியா தெற்கு வலயத் திலுள்ள பாடசாலைகளிலே அனுமதி வழங்குவதற்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்று வவுனியா மாவட்ட தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ஆர்.ஏ. ஒஸ்வேள்ட் தெரிவித்தார். (2-3)

# தமிழ்-சிங்கள மக்களுக்கு இடையிலான கலாசார இடைவெளி நீக்கப்படவேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கு இடையில் நிலவி வரும் கலாசார இடை வெளி நீக்கப்படவேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் அதுரலிய ரதன தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆண்டு காலமாக தமிழ் மக்கள் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவார்கள் என சிங்கள மக்களும் சிங்கள மக்கள் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவார்கள் என தமிழ் மக்களும் எதிர்பார்த்ததாக குறிப்பிட்டுள்ள அவர் இரு தரப்பினரும் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான காலம் மலர்ந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார். (2-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சுண்டங்கத்தரி

Botanical Name - Solanum torvum
Family - Solanaceae
Engl - Unarmed nigth shade
Sinh - Hekaridla.



முட்கள் கொண்ட பல முறை கிளைத்த தண்டுடைய புதர்ச் செடியாகும்; 3-5 மீ உயரம் வளரக் கூடியது; இலைகள் முட்டை வடிவின, விளிம்புகள் மடிந்தோ அல்லது சுருண்டோ காணப்படும்; மடலின் அடிப் பகுதி மென்தூவியால் மூடப்பட்டிருக்கும்; முட்கள் காணப்படுவதில்லை; மலர்கள் அதிக எண்ணிக்கையிலான கொத்துக்களாக இருமுறை கிளைத்த அமைப்புடன் காணப்படும்; வெண்மை நிறம் கொண்டவை; கனிகள் கோளவடிவிலானவை; சதைப்பற்றுக் கொண்டவை; வழவழப்பாக வரிகள் இல்லாமல் காணப்படும். விதைகள் மிருதுவானவை. பங்குனி - ஆடி பருவத்தில் மலர்பவை.

**பரம்பலும் இலை விருத்தியும்**

வெப்பப் பகுதிகளில் வளரக்கூடியது. மலைக்காடுகளிலும் ஏனைய பெருங் காடுகளிலும் தானாக முளைத்துப் பயிராகி வளர்ந்து வருகின்றது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

**100 கிராம் சுண்டை வற்றலில் உள்ள சத்துக்கள்:**

புரதம் 8.3 கி
கொழுப்பு 1.7 கி.
நார்ப்பொருள் 55.0 கி.
கல்சியம் 390 மி.கி.
பொஸ்பரஸ் 180 மி.கி.
இரும்பு 22.2 மி.கி.
கரோட்டின் 450 மைக்ரோகிராம்.

**மருத்துவப் பயன்கள்:**

● காய்களை காம்பு நீக்கி, விதை நீக்கி குழம்பு வைத்து உண்ணலாம். காய்கள் சதைக்கனி வகையைச் சார்ந்தவை. காய்கள் கிடைக்காத போது வற்றலைப் பயன்படுத்தலாம். காய் பித்த நோயைப் போக்கும். வாதநோய், சளி ஆகியவற்றைக் கண்டிக்கும்.

● தினம் சுண்டை வற்றலை எண்ணெயில் பொரித்து சாப்பிட்டுவர பசிமந்தம் தீரும்.

● காய்கள்ள விதை நீக்கி வறுத்து குரக்கன் களியுடன் சேர்த்துண்ண மாலைக்கண் (Night blindness) விலகும்.

● சுண்டைவற்றல், நெல்லிக் காய்வற்றல், வெந்தயம், ஓமம், சுக்கு, சீரகம், கறிவேப்பிலை (உலர்த்தியது), மாங்கொட்டைப் பருப்பு, மாதுளை ஓடு ஆகியவற்றை சமஅளவில் எடுத்து சிறிதளவு நெய்யில் பொன்வறுவலாக வறுத்து இடித்து, சூரணம் செய்து காலை, மாலை 1/2 - 1கிராம் அளவு பாலுடன் கொடுக்க மார்புச்சளி, கசநோய், ஆஸ்மா தீரும்.

● சுண்டைவற்றல், கறிவேப்பிலை (உலாந்தது), மிளகு, சீரகம், வெந்தயம் ஆகியவற்றை ஆமணக்கெண்ணெயில் பொன்வறுவலாக வறுத்து, சிறிது உப்பு சேர்த்து இடித்து பொடித்து பகல், இரவு உணவுகளில் முதல் கைப்பிடிச் சோற்றில் கலந்துண்ண பசிமந்தம், மலப்புழுக்கள், மூலநோய் தீரும்.

● சுண்டங்காய் வேரை புளி கரைத்த நீரில் கரைத்து தர நஞ்சை முறிக்கும்.

● மலேரியா காய்ச்சலுக்கு சுண்டங்காய் வேரின்பட்டை, நாயுருவி வேர்ப்பட்டை, சந்தனலேர்ப்பட்டை ஆகியவற்றை மைபோல அரைத்து மாத்திரைகளாக செய்து தினம் 3 வேளை வெந்நீரில் கலந்து அருந்த வேண்டும்.

● கொழுந்து இலைகளோடு தக்காளி, தேங்காய், வெங்காயம், இஞ்சி ஆகியவற்றைச் சேர்த்து சட்னி செய்யலாம். அதுபோல் முற்றாத இளங்காயிலிருந்து பச்சையாக சட்னி தயாரிக்கலாம். பசிமந்தம் தீர்ந்து நல்ல பசியுண்டாகும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

அறிவாளி என்பவன் யார் தெரியுமா? தேவைப் படும் போது தன் முடிவை மாற்றிக் கொள்ளத் தெரிந்தவன்தான் -டாக்டர் ஜான்சன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சிறுபான்மை மக்களின் ஒற்றுமையே பலம்

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வடக்குக் கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களிடையேயான உறவு பலப்பட்டுள்ளமை மனதிற்கு ஆறுதல் தருவதாக உள்ளது.

அதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து தமிழ் பேசும் மக்களின் உரிமை தொடர்பில் பொதுவாக குரல் கொடுப்பது, நீண்ட காலத்திற்கு பின்னர் சிறுபான்மை மக்களிடையே ஏற்பட்ட மகத்தான ஒற்றுமை எனலாம்.

இந்த ஒற்றுமை நிலைக்க வேண்டும்.

அதேநேரம் தமிழ்-முஸ்லிம் மக்கள் என்ற பேதம் கடந்து "தமிழ் பேசும் மக்கள்" என்ற அணியில் சிறுபான்மை இன மக்கள் ஒன்றுபடுவதும் அவசியமாகும்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தலைமை-முஸ்லிம்களுக்கான அரசியல் தல்லமை-மலையகத் தமிழ் மக்களுக்கென தனியான தலைமை என்ற பிரிவுகள் ஆளும் வர்க்கத்தின் காய் நகர்த்தலுக்கு உதவியதேயன்றி சிறுபான்மை இனமக்கள் உரிமை பெறுவதற்கு அது எவ்வகையிலும் உதவவில்லை.

இதற்கு மேலாக ஆளும் தரப்புடன் இணைந்து நன்மை பெறுதல் என்ற தமிழ்த் தலைவர்கள் சிலரின் முடிபுகளும் படுதோல்வி கண்டதே அனுபவ உண்மை.

ஆக, மலையகத் தமிழர்களின் முதுபெரும் தலைவராக இருந்த காலஞ்சென்ற தொண்டமான் மட்டும் ஆட்சி அமைக்கும் கட்சிகளுடன் இணைந்து மலையக மக்களின் ஒரு சில அடிப்படை உரிமைகளைப் பெற்றார்.

ஆனாலும் அவரால் மலையக மக்களின் அடிப்படை உரிமைகள் முழுவதையும் பெறமுடியவில்லை என்பது வரலாற்று நிஜம்.

எதுவாயினும் தொண்டமான் அவர்கள் ஆளும் தரப்பின் முடிபுக்ள் எல்லாவற்றுக்கும் இணங்கவில்லை.

ஆளும் தரப்புடன் அவர் இணைந்து செயற்பட்டாலும் தனதும்-மலைய மக்களினதும் தனித்துவத்தைப் பேணினார்.

இதுவே அவரை கௌரவத்திற்குரிய தலைவராக ஆக்கியது. தொண்டமான் கையாண்ட நடைமுறை கூட தற்போதைய அரசியலில் ஏற்புடையதல்ல என்பதே யதார்த்தம்.

இலங்கையின் தற்போதைய அரசியல் கலாசாரத்தில் சிறுபான்மை இனமக்கள்-சிறுபான்மை மக்களின் அரசியல் தலைமைகள் தங்களுக்குள் ஒன்றுபட்டு குரல் கொடுக்கும் போதே உரிமைகள் வெல்லப்படும்.

இதில் சிறுபான்மை இனம் சார்ந்த எவரும் எந்த ஆளும் தரப்புடனும் இணைந்திருக்கக் கூடாதென்பது முக்கியமான விடயமாகும்.

# ஊடகத்துறைக்கு எதிரான அரசாங்கத்தின் ஒடுக்கு முறைகளை கண்டிக்கின்றோம்

## மனித உரிமைகளுக்கான புத்திஜீவிகளின் ஒன்றியம்

(கொழும்பு)

ஊடக சுதந்திரத்தை மட்டுப்படுத்தி ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொள்ளும் ஒடுக்கு முறைகளை கண்டிப்பதாக மனித உரிமைகளுக்கான புத்திஜீவிகளின் ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

லங்கா பத்திரிகையின் ஆசிரியர் சந்தன சிறிமல்வத்த குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார். அமைச்சின் செயலாளர் ஒருவர் தொடர்பாக செய்தி வெளியிடப்பட்டமை சம்பந்தமாக அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன் மூலம் அரசாங்கத்தின் அரசியல்வாதிகள், உயர் அரச அதிகாரிகள் தொடர்பாகவும் அவர்களின் ஊழல் மோச டிகள் பற்றியும் தகவல்களை வெளியிடும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களை அச்சுறுத்த அரசாங்கம் முயற்சிக்கின் றது.

இவ்வாறான செயற்பாடு மக்களின் ஜனநாயக உரிமைகளை கடுமையாக மீறுவதாகும். வெளியிடப்பட்ட செய்தியில் தவறு அல்லது அந்த செய்தி அடிப்படையற்றதாக இருக்குமாயின் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கமுடியும் அதனை விடுத்து அடக்குமுறை செயற்பாடுகளை முன்னெடுப்பது ஜனநாயகத்தை மதிக்கும் நாட்டில் நடை பெறக் கூடாது.

அதேவேளை லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தில் ஊடகவியலாளர் பிரகீத் ஹெக்நேலியகொட கடந்த 25ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார். அவர் குறித்த எவ்வித தகவல் களும் இதுவரை வெளியாகவில்லை.

அதேபோல் தேர்தல் தினத்தில் இருந்து பாதுகாப்பு வழங்குவதாக கூறி ஊடக நிறுவனங்களுக்கு அருகில் இராணுவத்தினர் மற்றும் காவல்துறையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் மேற்கொள்ளும் தடைகளை தவிர நாட்டில் உள்ள ஊடகங்களுக்கு வேறு எந்த அச்சுறுத்தல்களும் காணப்படவில்லை.

தனியார் ஊடகங்கள் தமது நிகழ்ச்சிகளை ஒளிப்பரப்பும் போது அழுத்தங்கள் ஏற்படுத்தப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. தேர்தல் முடிவுகளை வெளியிடுவதில் இதற்கு முன்னர் கடைப்பிடிக்கப்பட்ட தேர்தல் ஒலி, ஒளிப்பரப்புகளுக்கு பதிலாக தேர்தல் ஆணையாளரின் இணக்கத்துடன் மேற்கொள்ளப் பட்ட புதிய வழிமுறைகள் மூலம் அதன் முன்னைய செயற்பாடுகளில் காணப்பட்ட வினைத்திறன் முழுமையாக இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தேர்தல் முடிவுகளில் நம்பகத் தன்மையை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் சமூகத்திற்குள் நிலைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஊடகவியலாளர்களை கொலை செய்து, ஊடகங்களை தீயிட்டு, மேற்கொண்ட பாரதூரமான ஊடக ஒடுக்குமுறையின் பலனாக ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை இழக்கப்பட்டு நாடு பாரிய பொருளாதார மற்றும் அரசியல் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது.

சர்வதேச ரீதியில் நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையினை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டு மக்களின் தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்தி ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற் கொள்ளும் அடக்குமுறைகளை உடனடியாக நிறுத்துமாறு மனித உரிமைகளுக்கான புத்திஜீவிகள் ஒன்றியம் அரசாங் கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. (2-6)

# விவசாய உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் மீள்குடியமர்ந்துள்ள மக்களில் விவசாயத்தில் ஈடுபடுபவர்களுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள விவசாயிகள் நல்லூர் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தமது விபர்ங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (6-4)

# எவ்வகையான அழுத்தங்களையும் தாண்டி எனது அரசியல் பயணம் தொடரும்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)



எவ்வாறான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் தமது அரசியல் பயணம் தொடரும் என ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தமக்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தினால் அரசாங்கம் இனவாதத்தை தூண்டும் வகையிலான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

கோட்டை சொலியஸ் மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளதாக லங்காதீப செய்தி வெளியிட் டுள்ளது. தமது காரியாலயத்தில் கடமையாற்றிய அனைவரையும் காவல் துறையினர் கைது செய்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் எந்த விதமான சூழ்ச்சித் திட்டத்தையும் தாம் மேற்கொள்ளவில்லை எனவும் மக்களின் ஜனாதிபதி தாமே எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# பிரதமர் நாற்காலிக்கான பனிப்போர் ஆளும் கட்சிக்குள் ஆரம்பம்

(கொழும்பு)

பொதுத்தேர்தலின் பின்னர் அமைக்கப்படும் புதிய அரசாங்கத்தின் பிரதமர் பதவியை எதிர்பார்த்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர்களிடையே பனிப்போர் ஆரம்பித்துள்ளது.

பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்கவை ஓய்வு பெறச் செய்து அவரது புதல்வர் விதுர விக்ரமநாயக்கவை அரசியலில் நிலைப்பெறச் செய்ய ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டுள்ள நிலையில் இந்த உட்கட்சி மோதல் ஆரம்பித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன, நிமல்சிறிபால டி சில்வா ஆகியோர் பிரதமர் பதவியை எதிர்பார்த்து காய் நகர்த்தி வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த ஜனாதிபதித்தேர்தலின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்த பசில் ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்குள் கருத்துக்கள் எழ ஆரம்பித்துள்ளன. இவர்கள் மூவரும் பிரதமர் பதவிக்காக காய்நகர்த்தி வரும் நிலையில் அந்தப் பதவியைப் பெறுவதற்காக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் எம் பனிப்போரில் ஈடுபட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பிரதமர் பதவி தொடர்பில் போட்டி ஏற்பட்டால் ஜனாதிபதி பெரும் நெருக்கடியைச் சந்திக்கக்கூடும் எனவும் அவ்வாறான நிலையில் ஜனாதிபதிக்கு மிகவும் நம்பிக்கையான முன்னாள் பிரதமர் விஜேதுங்கவைப் போன்று பிரதமர் ஒருவர் தேவைப்படுவார் எனவும் அதற்கு மிகவும் பொருத்தமானவர் என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தன்னைப் பற்றி வர்த்தக சமூகத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் சிலரிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜெனரல் பொன்சேகாவின் தோல்வியின் பின்னர் ஆத்திரமடைந்துள்ள கராவ சாதியினரை தாம் பிரதமராவதன் மூலம் திருப்தியடையச் செய்ய முடியும் என அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். பிரதமர் பதவி தொடர்பில் ஆளும் கட்சிக்குள் நெருக்கடிகள் எழுந்திருப்பதால் பொதுத் தேர்தலில் பிரதம வேட்பாளரை பெயரிடுவதில்லை என ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு



துன்பம் விளைவதற்கு அறியாமையைத் தவிர வேறு எதுவுமே காரணமில்லை. இந்தக் கருத்தைப் பட்டப் பகல் வெளிச்சத்தைப் போல நான் தெளிவாகப் பார்க்கின்றேன். உலகிற்கு யார் ஒளிதரப் போகிறார்கள்? பண்டைக் காலத்தில் தியாகம் தான் வாழ்க்கைக்கு உரிய விதியாக இருந்தது. இனி வரப்போகும் பல கோடி நூற்றாண்டுகளுக்கும் இந்த விதி அப்படியேதான் இருக்கப் போகிறது.

பலரின் நன்மைக்காக அனைவரின் சுகத்திற்காக உலகில் தைரியமும் சிறப்பும் பெருமளவில் பெற்றிருப்பவர்கள் தங்களைத் தியாகம் செய்து கொண்டுதான் ஆகவேண்டும். என்றென்றும் நிலைத்த மாறாத அன்பும் கருணையும் பொருந்திய பலநூறு புத்தபிரான்கள் இப்போது தேவைப்படுகிறார்கள்.



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அடுத்துள்ள நச்சாத்துப்பட்டி அருகேயுள்ள மலைக்கோயிலில் தைப்பூசவிழாவை முன்னிட்டு ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டது. இதில் காளைகள் முட்டி 2 பேர் இறந்தனர். 67 பேர் காயமடைந்தனர்.

# சிவசேனாவின் கருத்துக்கு ராகுல்காந்தி பதிலடி

தமக்கு எதிரான கருத்துகளைத் தெரிவித்த சிவசேனாவின் தலைவர் உத்தவ் தாக்கரேக்கு பதிலடி தரும் வகையில் பீகார் செய்தியாளர் சந்திப்பில் ராகுல்காந்தி பேசியுள்ளார்.

மும்பையில் பயங்கரவாதத் தாக்குதல் நடந்தபோது, பயங்கரவாதிகளை எதிர்த்துப் போரிட்ட என்.எஸ்.ஜி. படையில் பீகார், உத்தரப் பிரதேசம், குஜராத், ஹிமாஞ்சலப் பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலத்தைச் சேர்ந்த வீரர்கள் இருந்தனர். அந்த நேரத்தில் பீகார், உத்தரப் பிரதேசம் போன்ற வெளிமாநிலத்தைச் சேர்ந்தவர்களை வெளியேற்ற வேண்டும் சிவசேணா கூறிவில்லை என ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

மும்பை பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்த உத்தரப் பிரசேதம் மற்றும் பீகாரைச் சேர்ந்த வீரர்களின் தியாகத்தை மட்டும் உரிய முறையில் அங்கீகரித்திருப்பது மராத்திய வீரர்களை புண்படுத்தும் செயலாகும் என சாம்னா பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி அவரிடம் செய்தியாளர்கள் கேட்டனர்.

அதற்குப் பதிலளித்த ராகுல் இந்தியாவின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு இந்தியருக்கும் சொந்தமானது. பால் தாக்கரே மற்றும் ராஜ் தாக்கரேயின் கோணத்தில் இதை நான் பார்க்கவில்லை என்றார்.

மேலும் நாட்டின் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் செல்வதற்குஎல்லோருக்கும்உரிமை உள்ளது. பீகார் மற்றும் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களை மகாராஷ்டிரத்துக்குள் நுழையவிடாமல் தடுக்கும் விடயத்தில் நான் இனியும் மௌனமாக இருக்கப் போவதில்லை என அவர் மேலும்தெரிவித்தார்.(2-6)

# இந்தியாவில் இடம்பெறும் குற்றச் செயல்களின் பின்னணியில் நைஜீரிய இளைஞர்கள்

இந்தியா பல்வேறு பயங்கரவாத இயக்கங்களின் தாக்குதலுக்கு உள்ளாகி வருகிறது. நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை குலைக்கும் நோக்கோடு பல பயங்கரவாத அமைப்புக்கள் நாட்டிற்கு ஊடுருவி ஆங்காங்கே குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றன.

சமீப காலமாக, நைஜீரிய நாட்டு இளைஞர்கள் பலர், குற்றச் செயலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆபிரிக்காவில் உள்ள நைஜீரியா, வளர்ந்து வரும் ஒரு நாடு. கறுப்பர்களே அதிகமாக உள்ளனர். இங்குள்ள இளைஞர்கள் கல்விக்காகவும் வேலைவாய்ப்புப் பெறுவதற்காகவும் வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். இவ்வாறு இந்தியாவிற்கு வந்த நைஜீரிய இளைஞர்கள் பலர் போலி நாணய மாற்றம், போதை மருந்து கடத்தல், ஒன்-லைன் லொத்தர்மோசடி, கொலை, திருட்டு, கொள்ளை என பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆசியாவின் மிகப் பெரிய போதைப் பொருட்கள் உற்பத்தி மையமாக ஆப்கானிஸ்தான் திகழ்கிறது. இங்கிருந்து மும்பை, சென்னை வழியாக கிழக்காசிய நாடுகளான மியான்மார், மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தோனேஷியா, வியட்நாம், லாவோஸ், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு போதைப் பொருட்கள் கடத்தப்படுகின்றன. பல ஆயிரம் கோடி ரூபாய் கொட்டும் போதை கடத்தல் தொழிலில் பெரும்பாலும் பயங்கரவாத அமைப்புக்களைச் சேர்ந்தவர்களே ஈடுபட்டுள்ளனர். இந்த போதைக் கடத்தலில் பல நைஜீரிய இளைஞர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பணத்திற்காக இவர்கள் இந்த அபாயமான தொழிலை செய்து வருகின்றனர். உள்நாட்டில் பல நைஜீரியர்கள் தொடர்ந்து போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டுள்ளது பல வழக்குகள் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.(6)

# சீன அச்சுறுத்தலை சமாளிக்க இந்திய கடற்படை விமானதளம் விரிவாக்கம்

(இராமநாதபுரம்)

சீனா உட்பட அன்னிய நாடுகளின் அச்சுறுத்தலை சமாளிக்கும் விதமாக, தென்னிந்திய கடற்படை தளம் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. கடலோர ஊடுருவலை தடுக்கும் விதமாக தமிழகத்தில் கடற்படை தளம் அமைக்க முடிவு செய்யப்படவுள்ளதாகவும் புலிகள் அச்சுறுதல் இருந்ததால் இராமநாதபுரம் அதற்கு சரியான பகுதியாக கருதப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உச்சிப் புளியில், பருந்து என்ற பெயரில் கடற்படை விமானதளம் கடந்த மார்ச் 26இல் தொடங்கப்பட்டது. சேது சமுத்திர திட்டம் வரும் பட்சத்தில் இப்பகுதியில் அதிக அளவில் கப்பல்கள் வரும் என்பதால் அவற்றை பாதுகாக்கவும், கண்காணிக்கவும் பருந்து தளம் முக்கியத்துவம் கொண்டதாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்தியகடற்பகுதிஊடுருவல்லைகண்காணிப்பதே கடற்படைக்கு தலைவலியாக உள்ளது. இந்நேரத்தில் சீன அச்சுறுத்தல் இருந்து வருவதால் கடற்படையை வலுப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கச்சதீவு பகுதியில் சீனா ஆதிக்கம் செலுத்துவதாக வரும் தகவலை தொடர்ந்து தென்னிந்திய பாதுகாப்பை வலுப்படுத்த முடிபு செய்யப்பட்டுள்ளது. இதற்காக பருந்து விமானத்தளத்தை விரிவாக்கம் செய்ய உள்ளனர்.

இதற்காக, இடம்கேட்டு மாவட்ட நிர்வாகத் திடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பு நடவடிக்கை என்பதால், மாவட்ட நிர்வாகமும் இடம் தேடும் பணியை துரிதப்படுத்தி உள்ளது.

இது தொடர்பில் கலெக்டர் ஹரிஹரன் கூறுகையில், பருந்து தளம் தற்போது 155 ஏக்கர் நிலத்தில் செயல்பட்டு வருகிறது. விரிவாக்கம் செய்யும் விதமாக கூடுதலாக 300 ஏக்கர் நிலம் கேட்டுள்ளனர். அதற்கான விவரங்களை அரசுக்கு அனுப்பி உள்ளோம் என்றார். (2-6)

# கிராமி விருதுகளை கனவில் கூட நினைத்து பார்க்கவில்லை

## ஏ.ஆர்.ரகுமான் தெரிவிப்பு

கிராமி விருது கிடைக்கும் என்று கனவில் கூட நினைத்து பார்க்கவில்லை என்று ஏ.ஆர்.ரகுமான் கூறியுள்ளார். 2 கிராமி விருதுகளை வென்றுள்ள இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டு இருக்கிறார். அதில் அவர் கூறியிருப்பதாவது,

கடவுள் பெரியவர். நான் இப்படியெல்லாம் விருதுகள் வாங்குவேன் என்று கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை. கடவுளுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி சொல்ல விரும்புகிறேன்.

எனது ஆன்மீக ஆசிரியர்கள் அமீன் பீருல்லா மாலிக் சாகிப், டேனி பாயில், பாக்ஸ் ஆகியோருக்கு நன்றி. ஸ்லம்டாக் மில்லினர் படத்தில் நடித்த அனைவருக்கும், பணி புரிந்த ரசூல்பூக்குட்டி உட்பட அனைவருக்கும் நன்றி.

என் குழுவில் உள்ள குல்சார்ஜி, சுக்விந்தர் சிங், தன்விஷா, விஜய் பிரகாஷ், என் நண்பரும், மறைந்தசவுண்ட் என்ஜினீயருமான ஸ்ரீதர், மற்றும் தீபக், பிரசேதமன், விவிஜஜி சாய், ஆதித்யமோடி, சிவகுமார், நோயல் ஜேம்ஸ், கணேஷ்பயாஸ், அனிமேரி, ரஞ்சித் பரேட் ஆகியோருக்கும் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய ஏஜெண்டுகளை சாம் ஸ்வார்ட்ஸ், அமோஸ்நியூமன், என் நண்பர்கள் கரண், கோபால், விஜய், தீபக்கட்னி, மோகன்சோப்ரா, கிறிஸ், சைமன் லாங், ஆகியோருக்கும் இந்த நேரத்தில் நன்றி சொல்கிறேன்.



எனக்கு ஆலோசனை சொல்லி வழி காட்டும் மணிரத்னம், சேகர், கபூர், சுபாஷ் கை, ஆண்ட்ரூ லாயிட் வெப்பர் ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மற்றும் மும்பையில் உள்ள எனது திறமை மிகுந்த இசைக்கலைஞர்களுக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன்.

என் தந்தை, தாய், சகோதரிகள், அன்பான மனைவி மற்றும் குழந்தைகளுக்கும் நன்றி. எனது நலம் விரும்பிகள் அனைவருக்கும் நன்றி. என்னை ஊக்குவிக்கும் உலகம் முழுவதும் உள்ள அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன். *ஜெய்ஹோ இந்தியா.* இவ்வாறு இந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்.

மேலும் ஏ.ஆர்.ரகுமானுக்கு கிராமி விருதுகள் கிடைத்த தகவல் அறிந்ததும், தமிழ்நாடு முழுவதும் உள்ள அவருடைய ரசிகர்கள் தங்கள் மகிழ்ச்சியை கொண்டாடினார்கள். வடபழனி, சுப்பராயன் நகரில் உள்ள ஏ.ஆர்.ரகுமானின் வீட்டுக்கு முன் ரசிகர்கள் கூடிநின்று பட்டாசு வெடித்தார்கள். அவருடைய இசைக் கல்லூரியில் படிக்கும் மாணவர், மாணவிகள் ஏ.ஆர்.ரகுமானின் பாடல்களை பாடி நடனம் ஆடினார்கள். (2-6)


# ஸ்ரீநகரில் வன்முறை; கடையடைப்பு

(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் பொலிசார் வீசிய கண்ணீர்ப்புகை குண்டு பட்டு 16 வயது சிறுவன் இறந்ததால் மக்கள் போராட்டத்தில் குதித்தனர். நகரில் கடையடைப்பு நடத்தப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இளைஞர்கள் பொலிசுக்கு எதிராக போராட்டத்தில் குதித்தனர். அப்போது கண்ணீர்ப்புகை இளைஞர்கள் கூட்டத்தை நோக்கி வீசப்பட்டது. கூட்டத்தில் நின்றிருந்த வாமிக் பரூக் என்ற 16வயது சிறுவன் தலையில் பட்டு வெடித்தது. இச் சம்பவத்தில் அச்சிறுவன் இறந்து விட்டான். இதைக் கண்டித்து நேற்று முன்தினம் ஸ்ரீநகரில் கடையடைப்பு நடந்தது. இளைஞர்கள் பொலிஸ் மீது கல்வீச்சு நடத்தினர். நகரின் பல பகுதிகளில் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. (6)

## பாரதச் செய்திகள்



### திருவனந்தபுரத்தில்

# நான்கு மாடிக்கட்டடம் இடிந்து விழுந்தது; இடிபாடுகளில் சிக்கி தொழிலாளர்கள் தவிப்பு

(திருவனந்தபுரம்)

திருவனந்தபுரம் தம்பானூர் பஸ் நிலைய பகுதியில், தனியாருக்குச் சொந்தமான உடுப்பி சீனாவாஸ் டூரிஸ்ட் ஹோம் என்ற விடுதி செயற்பட்டு வருகிறது. ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வரும் இக்கட்டடத்தை இடித்து அங்கு புதிய கட்டடம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கான பணியில், வெளி மாநிலங்களைச் சேர்ந்த பல தொழிலாளிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் கட்டடம் இடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, கட்டடம் இடிந்து விழுந்தது. இடிபாடுகளில் சிக்கிக் கொண்ட தொழிலாளர்கள் ஐந்து பேரை தீயணைப்பு படையினர் காயங்களுடன் மீட்டனர். அவர்கள் அனைவரும், அரசு மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இடிபாடுகளில் மேலும் எட்டு தொழிலாளர்கள் சிக்கியிருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவர்களைத் தவிர, மேலும் எவ்வளவு பேர் சிக்கியுள்ளனர் என்பது குறித்து உடனடியாக தகவல் எதுவும் இல்லை. அவர்களை தேடும் பணி நடந்துவருகிறது. மீட்புப் பணிகளில் மாவட்ட நிர்வாகத்தை முழுவீச்சில் ஈடுபடுமாறு, மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. இடிந்து விழுந்த கட்டடத்தை ஒட்டியே, வேறுபல கட்டடங்களும் இருப்பதால், மீட்புப் பணியில் தீவிரமாக ஈடுபட முடியவில்லை. தற்போது இடிந்து விழுந்த பகுதிக்கு மறுபுறுத்தில் உள்ள கட்டடத்தின் நிலையும், அபாயகரமான நிலையில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (6)



# ஐ.சி.சி. ஒருநாள் போட்டி தரவரிசையில்

# ஒரு ஆண்டு வகித்த முதலிடத்தை இழந்தார் இந்திய வீரர் தோனி

## அவுஸ்திரேலிய அணி வீரர் ஹசி முதலிடத்தில்

(டுபாய்)

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி துடுப்பாட்டதரவரிசையில்கடந்தஒரு ஆண்டிற்கு மேலாக முதலிடத்திலிருந்த இந்திய அணித் தலைவர் தோனி 2ஆவது இடத்துக்கு பின் தள்ளப்பட்டுள்ளார். அத்துடன் முதல் இடத்திற்கு அவுஸ்திரேலிய வீரர் ஹசி முன்னேறியுள்ளார்.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் வீரர்கள் தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

இதில் துடுப்பாட்ட தரவரிசையில் அவுஸ்திரேலிய அணி வீரர் மைக்கெல் ஹஸி (825 புள்ளிகள்) தோனியை பின்னுக்கு தள்ளிவிட்டு முதலிடத்தை பிடித்துள்ளார். பாகிஸ்தானுக்கு எதிரான 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரில் ஹஸி 220 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் முதலிடத்துக்கு முன்னேறி இருக்கிறார். ஹஸி இதற்கு முன்பு



2006ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முதலிடத்திலிருந்தார்.

**தோனி முதலிடத்தை இழந்தார்**

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் முதலிடத்தில் இருந்து வந்த இந்திய அணித்தலைவர் தோனி பங்களாதேஷில் நடந்த 3 நாடுகள் போட்டியில் 184 ரண்கள் எடுத்தும் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்க முடியவில்லை. தோனி (822 புள்ளிகள்) 2 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

இந்திய வீரர்கள் சச்சின் டெண்டல்கர் 7 ஆவது இடத்திலும் ஷேவாக் 9ஆவது இடத்திலும் உள்ளனர்.

**அவுஸ்திரேலிய அணி முதலிடம்**

பந்து வீச்சில் நியூசிலாந்து வீரர் டானியல் விக்டோரி முதலிடம் வகிக்கிறார். இந்திய வீரர்களில் ஹர்பஜன்சிங் 6ஆவது இடத்தில் உள்ளார். மற்ற இந்திய வீரர்கள் யாரும் முதல் 10 இடத்துக்குள் வரவில்லை.

அணிகள் தரவரிசையில் அவுஸ்திரேலிய அணி (133 புள்ளிகள்) தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது. இந்திய அணி (121 புள்ளிகள்) 2 ஆவது இடமும் தென்னாபிரிக்க் அணி (119 புள்ளிகள்) 3ஆவது இடமும் வகிக்கின்றன.

## அப்ரிடி அதட்டல்; ஐ.சி.சி. அதிர்ச்சி



(டுபாய்)

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 5 ஆவது ஒருநாள் போட்டியில் அப்ரிடி பந்தை கடித்து சேதப்படுத்தினார்.

இது தொடர்பாக ஐ.சி.சி. விசாரணை நடத்தி அப்ரிடிக்கு இரண்டு இருபது-20 ஆட்டங்களில் விளையாட தடைவிதித்தது.

பந்தை சேதப்படுத்திய அப்ரிடி எல்லா அணிகளும் பந்தை சேதப்படுத்துகின்றன. ஆனால் நான் செய்தது மட்டும் தவறாக தெரிந்துவிட்டது என அதட்டலாக பேட்டி அளித்தார்.

அவரின் இந்த அடாவடி பேட்டியால் ஐ.சி.சி. கடும் அதிர்ச்சி அடைந்துள்ளது. மேலும் இந்த விவகாரத்தில் ஐ.சி.சி. மிகுந்த கவனத்துடன் செயல்பட தீர்மானித்துள்ளது.

# உலக டென்னிஸ் தரவரிசையில் பெடரர், செரினா தொடர்ந்து முதலிடத்தில்

(மெல்போர்ன்)

உலக டென்னிஸ் வீரர்-வீராங்கனைகளின் தரவரிசைப்பட்டியலை சர்வதேச டென்னிஸ் சங்கம் வெளியிட்டுள்ளது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சமீபத்தில் முடிந்த அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார்.

ரஷ்ய வீராங்கனை தினரா ஷபினா 2 ஆவது இடம் வகிக்கிறார். அத்துடன் டென்மார்க் வீராங்கனை கரோலின் ஒரு இடம் முன்னேறி 3 ஆவது இடம் பெற்றுள்ளார். ரஷ்ய வீராங்கனைஸ்வெட்லானா ஒரு இடம் பின்தங்கி 4 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

சீன வீராங்கனை நாலி அரை இறுதிக்கு முன்னேறியதன் மூலம் 17ஆவது இடத்தில் இருந்து 10ஆவது இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளார்.

**சானியாவுக்கு 59ஆவது இடம்**

இந்திய வீராங்கனை சானியா மிர்ஷா அவுஸ்திரேலிய ஓபனில் முதல் சுற்றிலேயே தோல்வி கண்டு வெளியேறியதால் 57ஆவது இடத்திலிருந்து 2 இடங்கள் பின்தங்கி 59 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அவுஸ்திரேலிய ஓபன் பட்டம் வென்ற ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார்.

## இந்திய வீராங்கனை சானியா சறுக்கல்

செர்பியா வீரர் ஜோகோவிச் மூன்றாவது இடத்திலிருந்து 2 ஆவது இடத்திற்கு முன்னேறியிருக்கிறார்.

இங்கிலாந்து வீரர் ஆன்டிமுர்ரே 4 ஆவது இடத்திலிருந்து 3 ஆவது இடத்திற்கு உயர்ந்துள்ளார். 2 ஆவது இடத் திலிருந்த ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் 4 ஆவது இடத்துக்கு பின் தங்கியுள்ளார்.

**பயஸ் முன்னேற்றம்**

இரட்டையர் பிரிவில் இந்திய வீரர் லியாண்டர் பயஸ் 8ஆவது இடத்திலிருந்து 7 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றதுடன் இரட்டையர் பிரிவில் காலிறுதி வரை முன்னேறியதன் மூலம் லியான்டர் பயஸ் இந்த முன்னேற்றம் கண்டுள்ளார்.

இரட்டையர் பிரிவில் முதல் சுற்றில் தோல்வி கண்ட மகேஸ் பூபதி ஒரு இடம் பின்தங்கி 8 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

## தெற்காசிய விளையாட்டுப் போட்டி; இலங்கை அணி மூன்றாமிடத்தில்

(டாக்கா)

11ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் நடைபெற்று வருகின்றது. இதில் இலங்கை 13 பதக்கங்களுடன் மூன்றாம் இடத்துக்கு பின்னடைவை கண்டுள்ளது.

போட்டியின் 4 நாட்கள் முடிபடைந்துள்ள நிலையில் இலங்கை இரண்டாம் இடத்திலிருந்து மூன்றாம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளபோது மூன்றாம் இடத்திலிருந்த பாகிஸ்தான் இரண்டாம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

நான்காவது நாளான நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான பட்மின்டன் போட்டியின் இறுதிப்போட்டியில் இந்தியாவிடம் தோல்வியடைந்து வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றியது.

இதேபோன்று 85 கிலோ எடை பளுதூக்கல்-போட்டியில் வெள்ளிப்பதக்கம் 94 கிலோ எடை பளுதூக்கல் போட்டியில் ஒரு வெண்கலப்பதக்கமும் ஜூடோ போட்டியில் 3 வெள்ளிப் பதக்கங்களும் ஒரு வெண்கலப்பதக்கமும் இலங்கைக்குக்கிடைத்தது.




வன்னியில் இருந்து கொழும்புத்துறைப் பிரதேசத்தில் மீளக் குடியேறியுள்ள. போரினால் அவயங்களை இழந்த குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு கியூடெக் கரிதாஸ் நிறுவன இயக்குநர் கி.ஜோ.ஜெயக்குமார் அடிகளார் 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவியை வழங்குவதை படத்தில் காணலாம்.

## பேர்த் ஒருநாள் போட்டியில்

## ஆஸி. ரசிகர் மைதானத்தில் ரகளை; விளக்கம் கேட்கிறது ஐ.சி.சி.



(டுபாய்)

பேர்த்தில் நடந்த 5ஆவது ஒருநாள் போட்டியின் போது ஏற்பட்ட பாதுகாப்பு குளறுபடி குறித்து விளக்கமளிக்குமாறு, கிரிக்கெட் அவுஸ்திரேலியாவை, சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) கேட்டுக்கொண்டுள்ளது.

பாகிஸ்தான், அவுஸ்திரேலிய அணிகள் பங்கேற்ற 5ஆவது ஒருநாள் போட்டி, பேர்த்தில் நடந்தது. இதில் பாகிஸ்தான் அணி களத்தடுப்பை செய்து கொண்டிருந்த போது (46 ஆவது ஓவர்) மைதானத்தில் நுழைந்த ரசிகர் ஒருவர், காலித் லத்தீப்பை கட்டிப்பிடித்து உருண்டார்.

பின்னர் பொலிஸாரால் பிடித்துச் செல்லப்பட்ட அவர் மீது, வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ரசிகருக்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதம், தவிர இம் மைதானத்தில் நுழைய ஆயுட்கால தடையும் விதிக்கப்பட்டது. இருப் பினும் சம்பவம் குறித்து ஐ.சி.சி. மிகவும் கவலையடைந்துள்ளது.

இது குறித்து ஐ.சி.சி. செய்தி தொடர்பாளர் ஒருவர் கூறுகையில்,

பேர்த் சம்பவம் எங்களுக்கு மிகவும் கவலையளிக்கிறது. இதன் மூலம் பாதுகாப் பில் ஏற்பட்ட குளறுபடி, வெட்டவெளிச்சமாகியுள்ளது. இது குறித்து விரைவில் விரிவான அறிக்கை அளிக்கும்படி கிரிக்கெட் அவுஸ்திரேலியாவை கேட்டுள்ளோம் என்றார்.

## ஐ.பி.எல். தொடரில் பாதுகாப்பு அச்சம் ஆஸி.,தென்னாபிரிக்க வீரர்கள் விலகல்?

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவில் இந்தியர்கள் தாக்கப்பட்டதால் அவுஸ்திரேலிய வீரர்களை மும்பையில் விளையாட அனுமதிக்க மாட்டோம் என்று சிவசேனா மிரட்டல் விடுத்திருந்தது. தெலுங்கான பிரச்சினை காரணமாக ஐதராபாத்தில் நடைபெற உள்ள போட்டிகளுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்த பிரச்சினைகளால் ஐ.பி.எல். போட்டியின் பாதுகாப்பு குறித்து வெளிநாட்டு வீரர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு அச்சம் தொடர்பாக அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க வீரர்கள் ஐ.பி.எல். போட்டியிலிருந்து விலகலாம் என்று தெரிகிறது. இரு நாட்டு வீரர்கள் சங்கமும் பாதுகாப்பு தொடர்பாக ஐ.பி.எல். அமைப்பிடம் பேசிவருகிறது.

இதற்கிடையே ஐ.பி.எல். தொடருக்கு முழுமையான பாதுகாப்பு வழங்கப்படும் என இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் உறுதியளித்துள்ளார்.

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## கிழக்குக் கல்வி அமைச்சில்...

மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் நிஷாம் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெறுகின்றார். அத்துடன் வலயக் கல்விப் பணிப்பாளர் மஜ்தூர் சம்பாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் பெறுகின்றார்.

இவ் இடமாற்றங்கள் எதிர்வரும் 8 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவதாக்க் கிழக்கு மாகாண ஆளுநர் றியல் அட்மிரல் மொகான் விஜயவிக்ரம குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் கடந்த வாரம் நடைபெற்று முடிந்த நிலையில் இவ் இடமாற்றங்கள் அரசியல் பழிவாங்கலுக்காக வழங்கப்பட்டுள்ளதாகக் கிழக்கு மாகாண சபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வடக்கு மாகாண ஆளுநரால் நேற்று முன்தினம் வடக்கு மாகாணத் துக்குட்பட்ட இடம்மாற்றங்கள் தொடர்பில் ஆராயப்பட்டபோது இதுவரை எதுவித முடிபும் எடுக்கப்படவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## மேற்குலக...

சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறான ஓர் நிலைமையே தற்போது இலங்கையிலும் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது. (ச-5)

## மன்னார்ப்...

மீனவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

வன்னிப் பகுதி மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட சரத் பொன்சேகாவுக்கு ஆதரவுவாக வாக்களித்ததாலேயே இந்தக் கெடுபிடி விதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் கூறுகின்றார்கள்.

ஆனால் அங்கு எந்தவிதமான புதிய தடைகளும் விதிக்கப்படவில்லை என்று இலங்கைக் கடற்படையின் பேச்சாளர் கூறுகின்றார்.

மன்னார்ப் பகுதி மற்றொரு நாட்டுக்கு அருகே இருப்பதால் கடத்தல்கள் குறிப்பாக ஆட்கடத்தல்களைத் தடுக்கவே இரவு மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ச-5)

## ட்ரான்ஸ்...

தகவல் சேகரிப்புத் தொகுதிகளைப் பொலிஸார் கழற்றிச் சென்றுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுத் துறையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் தினத்துக்கு மறுநாள் கொழும்பு ட்ரான்ஸ் ஏசியா ஹோட்டலில் வைத்துக் கைது செய்த மூவர் தொடர்பான விசாரணை அறிக்கையை நேற்றுப் புறக்கோட்டை மாஜிஸ்ரேட் நீதிமன்றில் சமர்ப்பித்த குற்றத்தடுப்புப் பிரிவினர் ஹோட்டல் வரவேற்புப் பகுதி வேலையாட்களிடமும் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஹோட்டலில் இருந்து கழற்றி எடுக்கப்பட்டுள்ள பாதுகாப்புக் கண்காணிப்புக் கமராக்களின் தகவல் சேகரிப்புத் தொகுதிகளைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிப் பிரிவிடம் வழங்கி பகுப்பாய்வு அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்கும்படி மாஜிஸ்ரேட் உத்தரவிட்டுள்ளார். (ச-5)

## இலங்கையின் நிலை குறித்து...

பின்னர் எதிரணி ஆதரவாளர்கள், செய்தியாளர்கள், கைது செய்யப்பட்டிருப்பதுடன் முன்னணிப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு எதிராக மரண அச்சுறுத்தல்கள், தொழிற்சங்கவாதிகளுக்கு எதிரான துன்புறுத்தல்கள் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் அனைத்துலக மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

இதேவேளை தேர்தலுக்குப் பின்னர் 160க்கும் மேற்பட்ட வன்முறைச் சம்பவங்கள், அத்துமீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகக் கூறுகின்ற கபே எனப்படும் சுதந்தி ரமான, நீதியான தேர்தலுக்கான கண்காணிப்புக் குழுவின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக் கோன், எப்போதும் இல்லாத அளவுக்கு இம் முறை வன்முறைகள் அதிகரித்திருப்பதும் நாட்டின் பல இடங்களில் நம்ப முடியாத அளவுக்குச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதைப் பார்க்கும்போது எங்களுக்கு மத்தியில் ஜனநாயக நடைமுறைகள் இருக்கின்றது என்பதைச் சிந்திக்க முடியாமல் இருக்கின்றது. இது குறித்துக் கவலையாக இருக்கின்றது என அவர்கள் கூறியுள்ளனர். (ச-5,9)

## 3 வருடங்க...

பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

1990 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்திரன் எனப்படும் மகாலிங்கம் முத்துலிங்கம் என்பவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அப் பஸ் குண்டுத் தாக்குதலுடன் 8 விடுதலைப்புலி உறுப்பினர்கள் தொடர்புபட்டிருப்பதாக விசாரணைகளின் போது அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## மகிந்தவின் 2-வது ஜனாதிபதி...

அறிவிப்பை வெளியிட்டிருந்தார். அதற்கமைய கடந்த மாதம் 26ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. இதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகத் தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்தார்.

எனினும் கடந்த 2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்த நாட்டு மக்கள் அவரை 6வருடங்களுக்கு ஜனாதிபதியாகத் தெரிவு செய்திருந்ததைச் சுட்டிக்காட்டி சில சட்ட வல்லுநர்கள் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அவரது பதவிக்காலம் அடுத்த வருடம் அதாவது 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதியே ஆரம்பமாகின்றது என வாதிட்டு வந்தார்கள்.

இந்த நிலையில் நடந்து முடிந்த தேர்தலின் பின்னர் புதிய ஜனாதிபதியாக தான் எப்போது பதவி ஏற்க வேண்டும் என்பது குறித்து உச்ச நீதிமன்றத்திடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஆலோசனை கேட்டிருந்தார். இதனையடுத்து நாட்டின் பிரதம நீதியரசர் அசோக டி சில்வாவின் தலைமையில் ஏழு பேர் அடங்கிய நீதியரசர்கள் கூடி ஆராய்ந்ததன் பின்னர் தமது முடிபை ஜனாதிபதி செயலகத்திற்கு அறிவித்திருந்தார்கள்.

இதனடிப்படையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலம் இந்த வருடம் நவம்பர் மாதம் 19ஆம் திகதியே ஆரம்பமாகின்றது என ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்திருக்கின்றார்.

கடந்த 2005ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் முதல் தடவையாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் மகிந்த ராஜபக்ஷ அந்த ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதியே பதவிப்பிரமாணம் செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ஆட்சி முறை தொடர்பில் சிரேஷ்ட சட்டத்தரணியும் சட்ட விரிவுரையாளருமான அ.இராஜட்ணம் ‘ஜனாதிபதித் தேர்தலும் எதிர்நோக்கும் சட்டப் பிரச்சினையும்’ எனும் தலைப்பில் கட்டுரை எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5,14)

## பொதுக் கூட்டத்தில் முடிபு...

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக நாம் தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ளோம். எமது முதலமைச்சரின் தலைமையில் ஒன்று கூடி எமது முடிபினை மேற்கொள்வோம்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் எமது கட்சி கிழக்கு வாழ் மக்களின் சார்பாக அவர்களின் நலன் தொடர்பான முடிபினை மேற்கொள்ளவுள்ளோம்.

அதன்படி ஒரு முடிபினை மேற்கொண்டு நாம் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளோம் என்று கூறினார். எதிர்வரும் பொதுத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிடவுள்ளதாக அதன் தலைவரும் பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிடவுள்ளதாக முன்னணியின் தலைவர் சாந்தினி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். கட்சியின் உயர் பீடம் ஒன்று கூடி ஆராய்ந்து தனித்துப் போட்டியிடுவது குறித்து ஒரு முடிபினை எடுப்போம் என்றும் கூறினார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனநாயக மக்கள் முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடவுள்ளதாக கட்சியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

எமது கட்சி மக்கள் கருத்தை அறிந்து அதன்படி நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாகத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பி.திகாம்பரம் தெரிவித்துள்ளார். (ச-9)

## சுதந்திர தின நிகழ்வுகளை...

கட்சியின் முடிபு குறித்துப் பேச்சாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிக்கையில்;

எதிர்க்கட்சிகளின் மீதும் அவற்றின் ஆதரவாளர்கள் மீதும் அரசு மேற்கொண்டு வரும் அடக்கு முறைகளுக்கு எதிராக இந்தப் புறக்கணிப்பைத் தாம் மேற்கொள்ளப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் எங்கு சுதந்திரம் இருக்கின்றது? எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவும் அவரது ஆதரவாளர்களும் அரச அடக்கு முறையினால் அனுபவிக்கும் துன்பத்தைப் பாருங்கள்.

எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவளித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஊடகவியலாளர்களுக்கு இடம்பெறும் கொடுமைகளைப் பாருங்கள்.

மக்கள் படும் துயரத்தைப் பாருங்கள். எங்கே இருக்கின்றது சுதந்திரம்? நாடு இவ்வாறான கொடுமைக்கும் கொடூரத்திற்கும் முகம் கொடுத்து வருகின்ற வேளையில் அரசு அறிவித்துள்ள சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்து கொள்வதில் அர்த்தமில்லை.

அதனால் இம்முறை சுதந்திர தின நிகழ்வுகளைப் புறக்கணிப்பதாக நாம் முடிபெடுத்துள்ளோம் என்று கூறினார். (ச-5)

Used but Good Condition !!!
IBM Computers for Sale
@
UNI - COMPUTER WAREHOUSE
Original IBM @

Intel Pentium IV 3.20 GHZ
1 GB Ram 80 GB HD
LCD Monitor DVD Rom
நம்ப முடியாத விலையில் இச் சலுகை இருப்புக்கள்
Price - Rs.34500/= only கையிலிருக்கும் வரை மட்டுமே !!!
மாணவர்கள், கணனி நிறுவனங்கள் மற்றும் Internet Browsing Centerகளுக்கு மிகவும் உகந்தது. கூடிய கணனிகளை கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.
அமெரிக்காவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டது!!
இக் கணனியை இடவசதி குறைந்த இடங்களில் இலகுவாக வைக்கமுடிகின்ற அதேவேளை, இக் கணனி இயங்கும் போது மிகக்குறைந்தளவு மின்சாரத்தையே எடுத்துக் கொள்ளும் வகையில் IBM நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது.
விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

பல்கலைக்கழக அனுமதி படிவம்
இன்று காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரையும் தொடர்ச்சியாக விநியோகம் செய்யப்படும். தேவையான படிவம் கைவசம் உண்டு.
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 6693
(C-4375)

LINUX
LINUX INSTITUTE-CANADA

அரசு(ICTA)வழங்கும் Linux Scholarship
(வரையறுக்கப்பட்ட பதிவுகள்)
மேலதிக விபரங்களுக்கு இன்றே
MCS
Supported By UNDP/JRRP
324, பலாலி வீதி,
பரமேஸ்வராசந்தி - அருகில்
யாழ்ப்பாணம்,
0772 395 895
(4376)

Diploma in OpenOffice
Text Document
Presentation
Database
Templates
Open Document
Spreadsheet
Drawing
Formula
License Not Required
Free Software
உலகில் மிகபிந்திய தொழில்நுட்பம்
OpenSource-OpenOffice
அரசு(ICTA)வழங்கும் Scholarship
பதிவுகள் 04.02.2010 க்குமுன்.மேலதிக விபரங்களுக்கு இன்றே,
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
www.mcsitcampus.org
MCS
Supported By UNDP/JRRP
(4376)

புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு
சிற்றிசன் போய்ஸ் செலெக்ஷன் அன் ரெயிலர்ஸ்
எமது நிறுவனமானது வாடிக்கையாளர் நன்மை கருதி, இல. 302, பலாலி றோட், ஆலடிச் சந்தி, திருநெல்வேலி எனும் முகவரியில் புதிய கிளையினை 03.02.2010 இன்று புதன் கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 10.30 மணி வரையுள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மகிழ்வோடு அறியத் தருகின்றோம்.
எமது கிளையில் சேட், சூட்டிங், புதிய டிசைன்களில் திருமண வைபவ கோட் வகைகள், பேஸ், கப், வெல்ற் வகைகள் மற்றும் தையல் இயந்திரம், உதிரிப்பாகங்கள், தையல் பொருட்கள் என்பனவற்றை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் குறித்த தவணையில் தையல் வேலைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:- கொழும்பு விலையில் தையல் இயந்திரங்களான HARA 5550, New Model, HARA 8700, JVCKY என்பனவற்றையும் பெற்றுக் கொள்ளலாம்.
இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்
இல.302, பலாலி றோட், ஆலடிச்சந்தி, திருநெல்வேலி.
உரிமையாளர் செ. டயேந்திரா T.P.: 077 6143301
(C-4371)

House of VSRP
218, Hospital Road, Jaffna.
தங்குமிட அறைகள் வாடகைக்கு
குளிரூட்டப்பட்டவை
நவீன வசதியுடன் இணைந்த குளியலறை
சுடு நீர் வசதி
இணையத்தள இணைப்பு வசதி
நகரின் மையப்பகுதி
தொடர்புகளுக்கு:
தொ.பே.இல: 011 2361003
(C-4377)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.02.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.